


32ஆவது ஆண்டில்

# விளம்பரம்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

Tel: 416-282-8059　　www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca　　www.tamilvanakkam.com




நதி: 32　　பாலம்: 10　　சமூக முன்னேற்றப்பத்திரிகை　　மாதமிருமுறை　　இலவசம்　　MAY 15, 2022

# ஒன்ராறியோ மாகாணத் தேர்தல்

2022 மே 3ஆம் திகதி ஒன்ராறியோ மாகாண முதல்வர் டக் போர்ட் ஒன்ராறியோ மாகாண ஆளுநர் Elizabeth Dowdeswellஐச் சந்தித்து ஒன்ராறியோ மாகாணத்தின் 42ஆவது சட்டசபையைக் கலைத்து தேர்தலை நடத்துமாறு பரிந்துரை செய்தார். அதை ஏற்று ஆளுநர் 42ஆவது சட்டசபையைக் கலைத்து அடுத்த மாகாணப் பொதுத் தேர்தலை 2022 யூன் 2இல் நடத்துவதாக அறிவித்தார்.

ஒன்ராறியோ மாகாண அரசியலமைப்புச் சட்டப்படி மாகாணப் பொதுத்தேர்தல் ஒரு பொதுத்தேர்தல் நடைபெற்று நான்கு வருடங்களின் பின்னர் வரும் யூன் மாதத்தின் முதலாவது வியாழக்கிழமையில் நடைபெற வேண்டும். கடந்த மாகாணம் தழுவிய பொதுத்தேர்தல் 2018 யூன் 7ஆம் திகதி நடைபெற்றது. இதனால் அடுத்த 43ஆவது ஒன்ராறியோ மாகாணத்தின் சட்டசபைக்கான தேர்தல் 2022 யூன் 2ஆம் திகதி நடைபெறுகிறது.

தேர்தல் பிரசாரங்கள் மே 4ஆம் திகதியில் இருந்து யூன் 1ஆம் திகதி வரை நடைபெறும். வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும் இறுதிநாள் மே 12ஆம் திகதி மாலை 2 மணி.


2018 யூன் 7இல் நடைபெற்ற தேர்தலின் போது ஒன்ராறியோ மாகாணம் முழுவதிலும் உள்ள 124 ஆசனங்களில் பழமைவாதக்கட்சி 76, புதிய ஜனநாயகக் கட்சி 40, லிபரல் கட்சி 7 மற்றும் பசுமைக் கட்சி 1 ஆசனங்களைப் பெற்றன. ஆனால், 2022 மே 3இல் மாகாணச் சட்டசபை கலைக்கப்படும்போது பழமைவாதக்கட்சி 67, புதிய ஜனநாயகக் கட்சி 38, லிபரல் கட்சி 7, பசுமைக்கட்சி 1, புதிய நீலக்கட்சி 1, ஒன்ராறியோ கட்சி 1 மற்றும் சுயேட்சை வேட்பாளர் 6 ஆசனங்களுடன் 3 ஆசனங்கள் வெற்றிடமாகவும் இருந்தன.

ஒன்ராறியோ மாகாணத்தின் ஆளும் கட்சியாக இருந்த பழமைவாதக் கட்சி அதன் தலைவர் டக் போர்ட் இன் தலைமையில் இத்தேர்தலில் மாகாணம் முழுவதிலும் உள்ள 124 தொகுதிகளிலும் போட்டியிடுகிறது. ஒன்ராறியோ மாகாண சட்டசபை கலைக்கப்படும் முன்னரே பழமைவாதக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தனது அடுத்த வரவு-செலவுத் திட்டமாக வெளியிட்டது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள்:



* இந்த ஆண்டில் $20 பில்லியனையும் அடுத்த பத்து ஆண்டுகளில் $158.8 பில்லியனையும் பெருந்தெருக்கள், போக்குவரத்து சாதனங்கள் மற்றும் வைத்தியசாலைகளைப் புனரமைக்கவும், புதிதாக அமைக்கவும் முதலிடுவது.
* மூன்று ஆண்டுகளில் $87 மில்லியனை துப்பாக்கிக் கலாசாரம், குழுக்களின் வன்முறை ஆகியவற்றை அடக்கி சமூக பாதுகாப்பை ஏற்படுத்த காவல்துறையை மேம்படுத்த முதலிடுவது.
* 2025ஆம் ஆண்டு இறுதிக்குள் ஒன்ராறியோ மாகாணம் முழுவதும் அதிவேக இணையத்தள தொடர்பை ஏற்படுத்த $4 பில்லியனை முதலிடுவது.
* வேலையில் காயம்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கும் இழப்பீட்டுப் பணத்தை அதிகரிப்பது. இதற்குப் போதியளவு பணம் ஏற்கனவே தொழிலாளர் செலுத்தும் காப்புறுதியில் (WSIB) மேலதிகமாக சேமிப்பில் இருக்கிறது.
* அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு $1 பில்லியன் பணத்தை வீட்டுப்பராமரிப்பை விரிவுபடுத்த முதலிடுவது.
* மாகாண அரச நிறுவனங்கள் சிலவற்றை ரொறொன்ரோ பெரும்பாகத்தில் இருந்து அருகில் உள்ள சிறிய நகரங்களுக்கு மாற்றுவதன் மூலம் மாகாண அரசு பல மில்லியனை ஆதன முதலீடு மற்றும் வாடகைச் செலவுகளில் சேமிப்பதுடன் உள்ளூர் பிராந்தியங்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்குகிறது.
* ஒன்ராறியோ மாகாணத்தின் குடிவரவாளரை விரைவில் அழைக்கும் திட்டத்தை (OINP) மேலும் விரிவுபடுத்த அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு $15.1 மில்லியனை முதலிடுவது.
* வேலை தேடுபவர்களுக்கு சேவைகள் வழங்கும் 'வேலை வாய்ப்பு ஒன்ராறியோ' நிறுவனத்தின் சேவைகளை மேம்படுத்த அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு $268.5 மில்லியனை முதலிடுவது.
* இளையோருக்கும் புதிய குடிவரவாளர்களுக்கும் தொழில்துறையில் பயிற்சி வழங்கும் திட்டங்களை ஊக்குவிக்க அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு $114.4 மில்லியனை முதலிடுவது.
* 2027-2028ஆம் நிதியாண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தை மேலதிக செலவினங்கள் இல்லாமல் சமப்படுத்தி

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)



























RE/MAX ACE REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in-Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Markham
$1,588,888
4+1 BR , 4 WR
Markham Rd/Denison St
SOLD HIGHEST SOLD PRICE ON THE STREET *
Semi-D- 4BR,4WR, Fin Bsmt,Sep E
Kingston Rd/ McCowan Rd
$2,899,000
Detached - BR: 5+5 WR:5
Lindsay
$399,000
Residential Land
Whitby
$1,098,900
Brand New - 3BR + 3WR
Midland Ave/ Kingston Rd
$659,900
2BR 2WR
Chinguacousy Rd & Wanless Dr
Brand New Home in Brampton. Closing Feb 2024. $1,299,900
Semi-Detached BR: 3 WR: 4
Jane/Rutherford
FROM $ 599,000
10 UNITS AVAILABLE
BR: 1 WR:1 Assignment Sale




உங்களுக்கு உதவும், உங்கள் வாழ்வை முன்னேற்றும் திட்டம் ஆண்ட்ரியா ஹோர்வத்திடமும் NDP-இடமும் உள்ளது.
OHIP-இல் மனநலப் பாதுகாப்பு, பல் பராமரிப்பு, மருந்துச் சீட்டுகள் உள்ளடக்குவது
எங்கள் கலாச்சாரம், மொழி, மற்றும் உணவுக்குகந்த நீண்ட-கால பராமரிப்பு மற்றும் வீட்டில் பராமரிப்பு சேவைகள்
எரிபொருள், வாகன காப்பீடு, மளிகை பொருட்கள், மின்சாரம், மற்றும் வீட்டின் விலைகளை குறைப்பது
குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வரி முடக்கம்
செலவுகளை சமாளிக்க கூடிய தொழில் வாய்ப்புகளை உறுதி செய்வது
DOLY BEGUM


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

# நாமும் நமது இல்லமும் 607

# புதிய அடுக்குமனை வாங்கும்போது...



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

பொதுவாக அடுக்குமனை வாங்கும்போது, ஒப்பமிட்ட காலத்திலிருந்து, ஏறக்குறைய ஐந்து வருடங்களின் (ஒரு சில விதி விலக்குகளும் உண்டு) பின்பே குறிப்பிட்ட மனை எமது கைகளிற்கு வந்து சேரும். இன்றைய காலகட்டத்தில் இதனைவிட அதிக காலம் எடுத்தால் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை. கடந்த நான்கு, ஐந்து வருடங்களாக அடுக்குமனையின் அலகு கள் மிகவும் வேகமாக விற்கப்பட்டு வந்ததனைக் காணக்கூடியதாக இருந்தது. அதிக விலையேற்றம், எதிர்வரும் இரு வருடங்களிற்கு வெளிநாட்டவர்கள் கனடா வில் அடுக்குமனை வாங்குவது தடை செய்யப்பட்டது. மற்றும் பல காரணங் களால், கனடியர்கள் சிறிது தயக்கம் கொள்வதனைக் காணக்கூடியதாக உள்ளது.

அத்துடன் அடுக்குமனை நிர்மாணம் செய்யும் சிறிய நிறுவனங்கள், புதிய கட்டிடத்தொகுதிகளை சந்தைப்படுத்து வதனை தாமதப்படுத்துவதனைக் காணக் கூடியதாக உள்ளது. கடந்த வருடத்தில் முதல் நான்கு மாதங்களில் சந்தைப் படுத்தப்பட்ட அடுக்கு மனைகளை இவ்வருடம் குறைவாகவே சந்தைப்படுத்தப் பட்டுள்ளது.

## APRIL 2022 - GTA HOUSING ARKET STATS - BY REGION

| APRIL 2022 - GTA HOUSING MARKET STATS - BY REGION | TORONTO | YORK | DURHAM | PEEL | HALTON |
|---|---|---|---|---|---|
| Average Sales Price: | $1,243,151 | $1,426,650 | $1,075,332 | $1,242,343 | $1,383,948 |
| Total # New Listings | 6,163 | 3,269 | 2,338 | 3,893 | 1,922 |
| Total # Sales | 3,023 | 1,230 | 1,089 | 1,535 | 824 |
| Avg. Listing Days On Market (LDOM) | 12 | 12 | 8 | 10 | 10 |
| YTD Increase | 16% | 22% | 29% | 25% | 22% |
| **HOUSE TYPES & AVERAGE SALE PRICE** | | | | | |
| Detached | $1,949,068 | $1,761,834 | $1,192,065 | $1,626,029 | $1,779,951 |
| Semi-Detached | $1,494,640 | $1,259,347 | $870,689 | $1,144,949 | $1,099,648 |
| Townhouse | $1,345,443 | $1,265,285 | $928,999 | $1,040,528 | $1,101,830 |
| Condo Apt | $820,835 | $759,751 | $659,734 | $701,272 | $746,478 |

*Prepared By: Sivage Sivagumaran BROKER CPA, CGA, GUILD™, ABR, SRES, SRS, RSPS |Source: TRREB Data As of, May/05/2022*

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 2021இன் முதல் கால்பகுதியை விட இவ்வருடம் (2022) 15.6% குறைவாகவே விற்பனை செய்யப்பட்டுள்ளது.

புதிய அடுக்கு மனைகள் வாங்கும்போது கவனிக்க வேண்டியவை:

1. ஆரம்ப முதலீடு (Deposit Structure)

பொதுவாக 20%ஆன ஆரம்ப முதலீடாக நிர்மாணம் செய்யும் நிறுவனம் எதிர் பார்க்கும் இந்த முதலீடு 2 அல்லது 3 வருடங்களில் 5% என்ற கால இடைவெளி யில் வழங்கப்படும். (உதாரணமாக $700000 வாங்கும் விலை எனில் $35,000 என்ற தொகை நான்கு தடவையாக செலுத்த வேண்டி ஏற்படும். சில சந்தர்ப்பங்களில் இந்த பெறுமதி மாற்றி அமைக்கப்படலாம்.

2. சீர்திருத்தும் காலம் 10 நாட்கள் (Cooling Period - 10 Days)

ஒன்ராறியோ மாகாணத்தில் வாங்கப்படும் புதிய அடுக்குமனைகளை திருப்பிப் பெறும் காலமாக 10 நாட்கள் உண்டு. இதனால் 10 நாட்களில் தகுந்த சட்டத் தரணியைக் கொண்டு பத்திரத்தை முற்றாக வாசித்து அதிலுள்ள ஷரத்து களையும், விடயங்களையும் நிபந்தனை களையும் அறிந்துக் கொள்வது, எதிர் காலத்தில் ஏற்படும் பிரச்சனைகளைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும். அத்துடன் விற்றல் - வாங்கல் பத்திரத்தில் உள்ள சில ஷரத்துக்களை மாற்றக்கூடிய வசதிகளும் உண்டு.

3. அனுபவமிக்க சட்டத்தரணி

பத்திரத்தை மீளாய்வு செய்வதும், அடுக்கு மனையின் சட்டப்பூர்வமாக வாங்குபவரின் பெயரில் மாற்றிக் கொள்தற்கும் அடமானக் கடனைப் பதிவு செய்வதற்கும் அனுபவமிக்க சட்டத்தரணியுடன் தொடர்பு கொள்வது சிறப்பானது.

4. வேறு ஒருவருக்கு மாற்றும் உட்கூறு (Assignment Clause)

பொதுவாக புதிய மனை அல்லது வீடு வாங்கும்போது கொள்முதல் மற்றும் விற்பனை ஒப்பந்தத்தை (Agreement of Purchase and Sale) வேறு ஒருவரிற்கு மாற்றும் உட்கூற்றை ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்வது சிறந்தது. இந்த உட்கூற்றின் பிரகாரம் வாங்குநர் தமது ஒப்பந்தத்தை வேறு ஒருவரிற்கு மாற்றிக் கொள்ள முடியும்.

5. நிர்மாணத் தடங்கல்

எதிர்பாராத பல காரணங்கள் (காலநிலை மாற்றங்கள், பொருட்களின் தட்டுப்பாடு, தொழில்புரிபவர்களின் தட்டுப்பாடு, வேலை நிறுத்தம், கோவிட்-19) குறிப்பிட்ட நிறைவு திகதி பின்போகக் கூடிய சந்தர்ப்பங்களே அதிகம்.

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் இந்த பின் போடும் திகதி மிகவும் சாதாரணமாகவே காணப்படுகின்றது.

6. பொருள் மாற்றங்கள் ஏற்படலாம்

பொருள் மாற்றங்கள் என்பது, அடுக்கு மாடிகளின் எண்ணிக்கை அதிகரித்தல், நீள அகலங்களில் சிறிய மாற்றங்கள் எதிர்பார்க்கலாம்.

7. அடுக்குமனை பராமரிப்பு செலவு (Condo. Fee)

அடுக்குமனை மாதந்தக் கொடுப்பனவு செலவு (Condo Fee or Maintenance Fee) முதல் வருடத்தில் மாறாமல், பத்திரத்தில் குறிப்பிட்ட தொகையாகவே இருக்கும்.

உதாரணமாக மாதந்தக் கொடுப்பனவு 60 சதம் ஒரு சதுர அடிக்கு எனக் குறிப்பிட்டு இருந்தால், 600 சதுர அடி மனைக்குரிய மாதாந்த கட்டணம் $360 ஆகக் காணப்படும். (600 x 60/100 = 360) இதற்கு மேலதிக 13% (HST) செலுத்த வேண்டும். இரண்டாவது வருடத்திற்குப் பிற்பாடு இதன் பெறுமதி அதிகரிக்கக் கூடிய சந்தர்ப்பங்களே அதிகம்.

8. இடைக்கால நிறைவு திகதி (Interim closing)

அடுக்குமனை அலகுகளிற்கு இரு நிறைவு திகதிகள் உண்டு. ஒன்று இடைக்கால நிறைவு திகதி மற்றது இறுதி நிறைவு திகதி.

இடைக்கால நிறைவு திகதியிலிருந்து இறுதி நிறைவு திகதிக்குரிய காலத்திற்கு வாங்குபவர் மாதாந்தக் கொடுப்பனவு நிர்மாண நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டும்.

இறுதி நிறைவு திகதிக்குப் பிற்பாடாக அடமானக் கடனிற்குரிய மாதாந்தக் கொடுப்பனவு செலுத்த வேண்டும். இதற்குப் பிற்பாடாகவே பராமரிப்புச் செலவு, பயன்பாடுகளிற்கு (Utilities) கொடுப்பவும் செலுத்த வேண்டும்.

9. இறுதி நிறைவு திகதி

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்...)



# MORTGAGE & LINE OF CREDIT

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage & Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinicanada.com
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students $20per sign

# அவலத்தை தந்தவர்களுக்கு ஏற்பட்ட அவலம்




மே மாதம் தமிழ் மக்களால் மறக்க முடியாத மாதம். கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் தான் முள்ளிவாய்க்கால் பேரவலம் நடைபெற்றது. தமிழ் மக்கள் வகைதொகையின்றிக் கொல்லப்பட்டனர். தமிழ் மக்களின் வீடுகள், சொத்துக்கள் குண்டு வீசி அழிக்கப்பட்டன. அப்போது மஹிந்த ராஜபக்ஸ நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார். இப்போது ஜனாதிபதியாக இருக்கும் கோட்டாபய ராஜபக்ஸ பாதுகாப்பு செயலாளராக இருந்து போரை வழிநடத்தினார்.

படையினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு அவரே பொறுப்பாளனாக இருக்கின்றார். இறுதிப் போரில் படையினரிடம் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டோருக்கும் அவரே பொறுப்பு.



இந்த ஆண்டு மே மாதம் ராஜபக்ஸக்களின் வீடுகள் தீப்பற்றி எரிகின்றன. மஹிந்த குடும்பம் பாதுகாப்புத் தேடி தப்பியோடுகின்றது. மக்கள் அவர்களை துரத்துகின்றனர், தேடுகின்றனர். சுற்றி வளைத்து நிற்கின்றனர்.

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஆரம்பிக்கும் காலத்தில் தென்னிலங்கையில் இந்த சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

அன்று, முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் சடலங்களின் மீதேறி அவர்கள் தங்கள் வெற்றியை பறைசாற்றினர். சிங்கள மக்களும் அதனைக் கொண்டாடினர். வெற்றிவீரர்களாக மஹிந்த ராஜபக்ஸவையும் கோட்டாபய ராஜபக்ஸவையும் தலையில் தூக்கிவைத்து சிங்கள மக்கள் கொண்டாடினர்.



2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஸவை சிங்கள மக்களே வெற்றிபெறச் செய்தனர். போரை முடிவிற்குக் கொண்டுவந்த தங்களின் கதாநாயகனாக கோட்டாபய ராஜபக்ஸவை அவர்கள் பார்த்தனர். அதற்கான பரிசாக அவருக்கு சிங்கள மக்கள் தங்கள் ஏகோபித்த ஆதரவை வழங்கினர்.

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகின்றபோது, நாட்டில் வாழும் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் செல்வாக்கு செலுத்தும் நிலை இருந்து வந்தது. ஆனால், கோட்டாபய சிங்கள மக்களின் வாக்குகளினாலேயே வெற்றி பெற்றார். தான் 69 இலட்சம் சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்றதாக அடிக்கடி கோட்டாபய ராஜபக்ஸ குறிப்பிடுவார். தன்னை தெரிவுசெய்த தனது மக்களின் விருப்பங்களுக்கே முன்னுரிமை வழங்குவதாகவும் அவர் தெரிவித்து வந்தார். சிங்கள மக்கள் விரும்பாத எந்தவொரு தீர்வையும் தமிழ் மக்களுக்கு வழங்க முடியாது என்றும் அவர் கூறிவந்துள்ளார்.

கோட்டாபயவை கொண்டாடிய, அவரை ஜனாதிபதியாக்கிய சிங்கள மக்களே இன்று அவருக்கு எதிராகப் போராடுகின்றனர். 'கோட்டா வீடு செல்' என்ற கோசத்துடன் அவர்கள் போராடுகின்றனர். கோட்டாபய ராஜபக்ஸ மட்டமன்றி ராஜபக்ஸ குடும்பமே வெளியேற வேண்டும் என சிங்கள மக்கள் போராடுகின்றனர்.

ராஜபக்ஸ குடும்பத்தினர் போராடும் மக்களுக்குப் பயந்து தலைமறைவாகியுள்ளனர். அவர்களை மக்கள் தேடுகின்றனர். அவர்கள் நாட்டை விட்டு தப்பியோட முடியாதவாறு கண்காணிக்கின்றனர். இப்படி எல்லாம் நடக்கும் என்று கோட்டாபயவோ, மஹிந்தவோ ஏனையோரோ கனவு கூடக் கண்டிருக்க மாட்டார்கள்.

இந்த மாற்றத்தைத் தமிழ் மக்கள் எவ்வாறு பார்க்கின்றனர்? ஒரு மே மாதத்தில் தாங்கள் எதிர்கொண்ட அவலங்களையும் இந்த மே மாதத்தில் அவலங்களை தந்தவர்கள் எதிர்கொள்ளும் அவலங்களையும் அவர்கள் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர்.

இறுதி யுத்த நாட்களில் மக்களை இலக்கு வைத்தே எறிகணை வீச்சுக்கள் நடத்தப்பட்டன. மக்களுக்குப் பாதுகாப்புப் பிரதேசம் என ஒரு பகுதியை அறிவித்து விட்டு, மக்கள் அந்தப் பகுதிக்குக் குழந்தை குட்டிகளுடன் செல்கின்றபோது அவர்களை நோக்கி எறிகணைகள் ஏவப்பட்டதையும் பிஞ்சுக் குழந்தைகள் கூட சிதைந்து பலியானதையும் மறக்க முடியாது. அவ்வாறானதொரு மனிதாபிமானமற்ற போரை நடத்திய 'வெற்றி வீரர்களை' அவர்களின் மக்களே இலக்கு வைக்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

போரின் போதும், போர் முடிந்த பின்னரும் தமிழ் மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. சூறையாடப்பட்டன. அவர்கள் நினைவுச் சின்னங்கள் அழிக்கப்பட்டன. மாவீரர் துயிலுமில்லங்கள் புல்டோசரால் பெயர்த்தழிக்கப்பட்டன.



இன்று ராஜபக்ஸக்களின் வீடுகள், சொத்துக்கள் மட்டுமன்றி அவர்களது ஆதரவாளர்களின் சொத்துக்களும் தீக்கிரையாக்கி அழிக்கப்பட்டுள்ளன. பல நாட்களாக வான் தாக்குதல்களையும், எறிகணை வீச்சுக்களையும் மேற்கொண்டு தமிழரின் சொத்துக்கள் தரைமட்டமாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. இன்று அவர்களின் மக்கள் எவ்வித ஆயுதங்களுமின்றி அவர்களின் சொத்துக்களை அழித்துள்ளனர்.

தங்காலையில் அமைக்கப்பட்டிருந்த டி.ஏ. ராஜபக்ஸவின் சிலை கீழே வீழ்த்தி உடைக்கப்பட்டது. ஹம்பாந்தோட்டை மெதமுலனவில் அமைக்கப்பட்டிருந்த மஹிந்தவின் தந்தையின் நினைவுத் தூபியும் அழிக்கப்பட்டுள்ளது.



ஒரே நாளில் ஒரு போரை நடத்தி முடிப்பது போன்று அவர்களின் வீடுகள், சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பாதுகாப்புப் படையினர் பார்த்துக் கொண்டிருந்தனர். மக்களை எதிர்த்துப் போர்புரிய முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. முள்ளிவாய்க்காலில் போர் முடிவிற்கு வந்தபோது தென்னிலங்கையில் சிங்கள மக்கள் கொண்டாடினர். பாற்சோறு வழங்கி மகிழ்ந்தனர். வெடி கொளுத்தினர். தமிழ் மக்களுக்கு அவலத்தைத் தந்தவர்கள் அவலப்படும் நிலையில் தமிழ் மக்கள் அதனைப் பார்த்துக்கொண்டு மௌனமாகவே இருக்கின்றனர். இந்த நாட்களில் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் நினைவை கடைப்பிடிப்பதில் மிகவும் உணர்வுபூர்வமாகக் காணப்படுகின்றனர்.

முள்ளிவாய்க்கால் வாரம் 12ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. அன்றைய நாளில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது. ஏனைய இடங்களிலும் இந்த ஆரம்ப நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

மே-18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும். இம்முறை தெற்கிலிருந்து சிங்கள மக்களும் முள்ளிவாய்க்கலுக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாற்றங்களை வரவேற்போம்.


## புதிய...

04 ஆம் பக்கத் தொடர்ச்சி

(Final Closing Date)

* ஆதனம் மாற்றுவரி (Land Transfer Tax)
* வளர்ச்சிக் கட்டணம் (Development Fee)
* கல்விக் கட்டணம் (Education Fee)
* பயன்பாடுகள் தொடர்பான செலவு (Utility Connection)
* சட்டத்தரணி செலவு
* காப்புறுதி
* அடமானம் பதிவு - போன்ற செலவுகளை எதிர்பார்க்க வேண்டும்.

10. பல வரிகள் பலவிதமான வரிகள் (HST / GST) எதிர்பார்க்க வேண்டும். வாங்குவோரிற் குரிய இருப்பிடமாக இருக்கும் சந்தர்ப்பத்தில்



இந்த மேலதிக வரி தவிர்க்கப்படும். வாங்குபவரின் முதலீட்டு மனையாக இது இருப்பின் செலுத்தப்படும் HSTஇன் அதிக அளவாக $24,000வரை திருப்பிப் பெறமுடியும்.

# ராஜபக்ஸக்களின் யுகம் முடிவிற்கு வருகின்றது!

**- விகிர்தன் -**

இலங்கையில் மிக அமைதியாகவும், ஜனநாயக வழிமுறையை கடைப்பிடித்தும் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தை வன்முறையை பிரயோகித்து அடக்க முற்பட்டதால் நாடு தீப்பற்றியெரியும் நிலைக்கு உள்ளாகியுள்ளது.

கடந்த 9ஆம் திகதி அலரிமாளிக்கைக்கு முன்பாக இருந்த ‘மைனா கோ கம’ மீது தாக்குதல் நடத்தி அங்கிருந்த கூடாரங்களை கிழித்தெறிந்து தீ மூட்டிய பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் எனக் கூறப்படும் குண்டர் படையினர் காலிமுகத்திடலுள்ள ‘கோட்டா கோ கம’ மீதும் தாக்குதல் நடத்தினர். இதனால் அப்பகுதி போர்க்களமானது.

கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி காலிமுகத்திடலில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் ஆரம்பமானது. நாட்டில் பொருளாதார நெருக்கடியை உருவாக்கி, மக்களின் வாழ்வாதாரத்தை மோசமான நிலைக்கு உள்ளாக்கியமைக்குப் பொறுப்பேற்று நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ மற்றும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ ஆகியோர் பதவி விலகிச் செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நாட்கள் செல்லச் செல்ல அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வோர் தொகையும் அதிகரித்து அந்த இடம் பரந்ததொரு போராட்டக்களமாக விரிவடைந்தது. இதனைத் தடுப்பது எவ்வாறு என அரசாங்கம் யோசித்து அதற்கான சதி முயற்சிகளை உருவாக்கத் தொடங்கியது. இந்த நிலையில், அரசாங்கத்தின் அமைச்சர்கள் யாவரும் பதவி விலக நேரிட்டது. ஆனால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ எக் காரணம் கொண்டும் தான் பதவி விலகப் போவதில்லை என இறுமாப்போடு இருந்தார். அவரால் உருவாக்கப்பட்ட குண்டர் படையே கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடலுக்குள் புகுந்து தாக்குதலை மேற்கொண்டது. காலிமுகத்திடல் கலவரத்தின் பின்னரே மஹிந்த ராஜபக்ஸ பதவிவிலகிய செய்தி வெளியானது.

அமைதி வழியில் போராடியோர் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறை, குளவிக் கூட்டில் கல்லெறிந்த கதையாக மாறியது. தென்னிலங்கையின் பல பகுதிகள் தீப்பற்றி எரிந்தன. மஹிந்த குடும்பமே உயிருக்குப் பயந்து தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டது. ஒரே நாளில் ராஜபக்ஸக்களின் குடும்ப சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன. ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரசாங்கத்தின் முக்கிய ஆதரவாளர்களின் வீடுகள் யாவும் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

ஒரே நாளில் அல்லது ஒரே இரவில் ஆளும் தரப்பினர் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவாளர்களின் வீடுகள் சொத்துக்கள் என 40இற்கும் மேற்பட்டவை தீக்கிரையாக்கப்பட்டன. இவற்றையெல்லாம் காலிமுகத்திடலில் போராட்டம் நடத்திய இளைஞர் வீதியில் இறங்கிச் செய்யவில்லை. நாட்டில் ராஜபக்ஸ அரசாங்கத்தினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, நெருக்கடிக்கு உள்ளான பொதுமக்களே மேற்கொண்டனர். ஒரே குழுவினர் எல்லா இடங்களிலும் சென்று இத்தாக்குதல்களை மேற்கொண்டிருக்க வாய்ப்பில்லை. அந்தந்தப் பகுதிகளில் உள்ளவர்களே அந்தந்தப் பகுதிகளில் இவற்றை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவொரு வன்முறைப் போராட்டமாக இருந்த போதிலும் மக்கள் கிளர்ந்தெழுந்து மேற்கொண்ட மக்கள் போராட்டமாகவே மாறியிருக்கின்றது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் நுழைவாயிலை மறித்து இளைஞர்கள் போராட்டம் நடத்தினர். விமான நிலையம் செல்லும் வாகனங்கள் பொது மக்களால் கண்காணிப்பட்டன. சந்தேகத் திற்குரிய வாகனங்கள் மக்களால் சோதனையிடப்பட்டன. ராஜபக்ஸ குடும்பத்தினர் மட்டுமன்றி அரசாங்க உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதை நோக்காகக் கொண்டே இந்த நடவடிக்கைகளில் மக்கள் இறங்கினர்.

திருகோணமலையில் உள்ள கடற்படை முகாமும் மக்களால் முற்றுகையிடப்பட்டது. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் திருகோணமலை கடற்படைத் தளத்தில் இருப்பதாகத் தெரியவந்ததை அடுத்தே அவர்கள் அங்கு கூடினர். தற்போது திருகோணமலை கடற்படைத்தளத்திலேயே மஹிந்த ராஜபக்ஸ பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள வன்முறை சூழ்நிலைக்கு அரசாங்கமே காரணம் என்பதை அனைவருமே ஏற்றுக்கொள்கின்றனர். அது மட்டுமன்றி, காலிமுகத்திடலில் அரசாங்கமே வன்முறையை தொடங்கியது என்பதை சர்வதேச நாடுகளும் ஏற்றுக்கொண்டு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களை அமெரிக்கா வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் மிச்செல் பச்லெட் கண்டனம் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது, முன்னாள் பிரதமரின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு எதிரான வன்முறைகள் உட்பட இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வருவதால், தாம் மிகவும் கவலையடைந்துள்ளதாக பச்லெட் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இந்தியா உள்ளிட்ட வேறு நாடுகளும் அமைப்புக்களும் இவ்வாறு கண்டனங்களையும் கவலைகளையும் தெரிவித்து வருகின்றன.

இவை ஒரு புறமிருக்க, நாட்டில் உடனடியாக ஒரு மாற்றம் ஏற்படாமல் நிலைமை இவ்வாறே தொடருமானால் எதிர்வரும் நாட்களில் பொதுமக்கள் மேலும் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டிவரும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நிலையான ஆட்சி முறைமையும், அரசாங்கமும் கூடிய விரைவில் நியமிக்கப்பட வேண்டும் எனவும், குறுகிய காலத்தில் நாட்டில் ஸ்திரமான நிலைமையை ஏற்படுத்த முடியாவிட்டால் நாடு பெரும் சிக்கலை எதிர்நோக்கும். 10 மணி நேரத்திற்கும் மேலாக மின்வெட்டு அமல்படுத்தப்படலாம். மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என அவர் தெரிவித்துள்ளார். அமைதியான போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அவர் தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்குள் நாட்டின் அரசியல் நிலையில் மாற்றம் ஏற்படவில்லையெனின் தான் பதவி விலகப் போவதாகவும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதாரப் பிரச்சினைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியினையே அரசாங்கம் நம்பியிருக்கின்றது. அதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அரசியல் நிர்வாகத்தில் ஒரு சுமுக நிலை ஏற்படாவிட்டால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியும் உடனடியாகக் கிடைக்கப்போவதில்லை.


இலங்கையுடன் தொழில்நுட்ப மட்டத்திலான கலந்துரையாடல்களை தொடர்ந்து முன்னெடுப்பதாகவும், புதிய அரசாங்கம் நிறுவப்பட்டதும், கொள்கை மட்டத்திலான கலந்துரையாடல்களை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும் எனவும் சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. எனவே, மாற்றம் ஒன்று உடனடியாகத் தேவைப்படுகின்றது. இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டு ஆறு மாதங்களில் தேர்தலை நடத்துவது குறித்து பல தரப்பினரும் ஆலோசனை தெரிவித்து வருகின்றனர். இடைக்கால அரசாங்கத்தில் பிரதமர் பதவியை வகிக்குமாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ அழைப்பு விடுத்துள்ளார். சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் சஜித் பிரதமராவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது. சஜித் தனது கடுமையான நிலைப்பாட்டிலிருந்து சற்று விலகியிருந்தாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ பதவி விலகாமல் தான் பிரதமர் பொறுப்பை ஏற்க முடியாது என்று தெரிவித்துள்ளார். பதவி விலகுவதற்கு கோட்டாபய ராஜபக்ஸ இணங்குவதாகத் தெரியவில்லை. ஆனால், இந்த நெருக்கடி நிலை இப்படியே நீடிக்காமல் இருக்க வேண்டுமானால் அவர் பதவி விலகியே ஆக வேண்டும். இல்லாவிட்டால் பொதுமக்களின் தற்போதைய கொதிநிலை மேலும் அதிகரிக்கும்.

இந்த நிலையில், முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க கடந்த 12ஆம் திகதி புதிய பிரதமராக பதவியேற்றுள்ளார்.

இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டு ஆறு மாதங்களில் தேர்தல் நடத்தப்பட்டாலும் ராஜபக்ஸக்கள் இனி ஆட்சிக்கு வர முடியாது. மக்கள் அவர்களை முழுமையாக நிராகரித்து விட்டனர். இலங்கையில் ராஜபக்ஸக்களின் யுகம் முடிவிற்கு வந்துவிட்டதென்றே கூறலாம்.


**CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT**

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

**Commercial**

. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 89




- அகணி -
authorakani@gmail.com

தியானத்தின் மூலம் அதிகமான பயன்களை அடையலாம். இது உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மையளிக்கின்றது. அதிக தூக்கத்தில் கிடைக்கும் ஓய்வினை விட அதிகமானளவு ஓய்வினைத் தியானத்தின் மூலம் பெறலாம் என்று கூறப்படுகின்றது. தியானத்தால் மனவழுத்தம் குறைகிறது. தியானம் செய்யும்பொழுது உடலில் உள்ள கலன்களிலும் பிராணம் நிரப்பப் பெற்று விடுகிறது. அதனால் இன்பம், அமைதி, உற்சாகம் ஆகியவை அதிகரிக்கும். உடலில் உள்ள இரத்த அழுத்தமும் குறைகின்றது. தலைவலி, புண்கள், தூக்கமின்மை, தசை மற்றும் மூட்டு பிரச்சினைகள் போன்ற இறுக்கம் காரணமான வலிகளை நீக்குகின்றது. செரோடொனின் உற்பத்தியைக் கூட்டி அதன்மூலம் மனநிலையிலும் நடத்தையிலும் முன்னேற்றம் கிடைக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது. தியானம் ஒரு அல்பா நிலையினை மூளையில் ஏற்படுத்தி அதன்மூலம் ஆற்றுப்படுத்துகின்றது. மனம் புத்துணர்வுடனும் மென்மையாகவும் அழகானதாகவும் ஆகின்றது. சீரான தியானப் பயிற்சியின் மூலம் பதட்டம் குறைகிறது. படைப்பாற்றல் அதிகரிக்கின்றது. உள்மனமே மகிழ்ச்சியினை நிர்ணயிக்கும் என்னும் புரிதலை தியானம் அளிக்கின்றது. நீங்கள் அதிக உணர்ச்சி வசப்பட்டு திடமற்ற நிலை ஏற்பட்டால் தியானம் உங்களைச் சாந்தப்படுத்துகின்றது. விழிப்புணர்வு பரிணாமம் ஆகியன நாளாந்தம் செய்யும் தியானத்தினால் உங்கள் விழிப்புணர்வு பரிணாம வளர்ச்சியடைந்து, காலப் போக்கில் உயர்ந்த சீரிய அனுபவங்களைப் பெற முடிகிறது. உங்கள் விழிப்புணர்வு பரிணாம வளர்ச்சியடையும் போது வாழ்வில் ஏற்படும் தொல்லைகள் புறக்கணிக்கத் தக்கவையாகி விடுகின்றன. கோபம், ஏமாற்றம் ஆகியவை கண நேரம் இருந்து மறைந்து விடும்.

உங்களைப்பற்றி நீங்கள் அறிந்து கொள்ளும்போது மேலும் அதிகமாக வாழ்வின் மர்மங்களையும் இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள விரும்புவீர்கள். அப்போது, வாழ்க்கையின் பொருள் என்ன? நோக்கம் என்ன? அன்பு என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன? போன்ற கேள்விகள் எழத் துவங்கும். இத்தகைய கேள்விகள் எழும்போது, நீங்கள் அதிர்ஷ்டசாலி என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

தியானம் என்பது தளர்வு, உள் சக்தி அல்லது உயிர் சக்தியை உருவாக்குதல் மற்றும் இரக்கத்தை வளர்த்துக் கொள்ளுதல் அன்பு, பொறுமை, தாராள குணம் மற்றும் மன்னிப்பு ஆகியவற்றை ஊக்குவிக்க வடிவமைக்கப்பட்டுள்ள நுட்பங்கள் போன்ற பரந்த பல்வேறு நடைமுறைகளை குறிக்கிறது. குறிப்பாக ஓர் இலட்சிய வடிவம் தியானம் ஒற்றை-குறியிடப்பட்ட செறிவை சிரமமின்றி தொடர்ந்து நோக்குகிறது.



தியானம் பற்றி பரமஹம்ஸ யோகானந்தர் பின்வருமாறு கூறுகிறார். “ஆழ்ந்த தியானத்தின் மூலம் பக்தர் அந்த அமைதியின் விழிப்புணர்வை விரிவாக்கி, அதனால் தன் உணர்வுநிலை பிரபஞ்சம் முழுவதும் பரவுவதாகவும், அந்த அமைதியில் எல்லா உயிர்களும் எல்லாப் படைப்பும் விழுங்கப்படுவதாகவும் உணரும் போது, அவர் பேரண்டப் பேருணர்வு நிலையினுள் நுழைந்து கொண்டிருக்கிறார். அவர் அந்த அமைதியை எல்லா இடங்களிலும் உணருகிறார். மலர்களில், ஒவ்வொரு மனிதரிலும், வளிமண்டலத்தில். அவர் பூமியும் எல்லா உலகங்களும் அந்த அமைதிப் பெருங்கடலில் நீர்க் குமிழிகளைப் போல மிதந்து கொண்டிருப்பதைக் காண்கிறார்.”

தியானத்தில் நான்கு நிலைகள் உள்ளதாகக் கூறுகின்றனர். மனதின் கவனத்தை அதாவது புத்தியை ஒரே விடயத்தில் செலுத்துவது முதல் நிலை. இதனைச் செய்ய முடிந்தால் மட்டுமே தியானத்தின் மற்ற நிலைகளுக்கு ஒருவரால் செல்ல முடியும். ஒரே விடயத்தில் மனதைச் செலுத்தி அதில் முழுமையாக ஈடுபடுவது இரண்டாம் நிலையாகும். இந்த நிலையில் தியானம் செய்ய முடிந்தால் உலக விவகாரங்களில் வெற்றியைப் பெறலாம். நம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதை உணராமல் நாம் எடுத்துக்கொண்ட காரியத்தில் முழுமையாக ஒன்றிவிடுவது மூன்றாம் நிலையாகும். இது தியானத்தில் உயர்ந்த நிலை. அந்த நிலையை சமாதி நிலை என்பர். நான்காம் நிலையே தியானத்தின் இறுதி நிலையாகும். இந்த நிலையில் தியானம் செய்வோர் பேராற்றலைப் பெறுவர்.

எங்கள் உடல் நலத்திற்கும், உள நலத்திற்கும் தியானம் பெரிதும் உதவும் என்ற வகையில் தியானப்பயிற்சி இன்னல் தீர்க்கும் இயற்கை வழிமுறைகளில் ஒன்றாகக் கருதி உரையாடிக் கொள்கின்றோம். ஆனால் மிகவும் கவனமாகச் செய்ய வேண்டிய பயிற்சி இது. தியானத்தின் உயர்நிலைக்குச் செல்ல வேண்டும் என்ற அதீத ஆசையால் உந்தப் படாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

தியானப் பயிற்சியைச் செய்வதற்கு பல்வேறு தடைகள் ஏற்படும். இதனைப் பற்றி இப்பொழுது கவனிப்போம். ஆரம்ப காலத்தில் பொதுவாக உடனடிப் பலன்களை எதிர்பார்ப்பதால் ஆர்வம் குறைவதற்கான வாய்ப்பு இருக்கும். இது முக்கியமான தடையாகும். எனவே மிகுந்த பொறுமையோடு தியானப் பயிற்சி செய்ய வேண்டும். தியானத்தில் வெற்றி பெற்ற யோகிகளில் சுவாமி விவேகானந்தர், ரமண மகரிஷி முக்கியமானவர்கள். தியானம் செய்வதற்கு அமைதியான சூழல் முக்கியமானது. அமைதியான சூழலின்மை தியானத்தில் வெற்றி பெறுவதற்கு பெரும் தடையாக உள்ளது. ஒரு குறிக்கப்பட்ட நேரத்தில் தியானத்தை செய்யாமல் விடுவதும், ஒழுங்கின்றி விட்டு விட்டுச் செய்வதும் தியானப் பயிற்சியில் தடை ஏற்படும். ஆரோக்கியமான உணவின்மை, உடற்பயிற்சியின்மை போன்ற காரணிகளும் தியானத்திற்குத் தடையாக உள்ளது. தியானத்தில் காணும் முன்னேற்றம் பற்றியோ, பட்டறிவுகள் பற்றியோ மற்றவர்களுடன் பேசக் கூடாதெனவும் கூறப்படுகிறது. தியானத்தைத் தொடர்ச்சியாகச் செய்தல் முக்கியமானது. தியானம் செய்வதற்கு ஒரு குரு அவசியம் எனக் கூறப்படுகிறது. தூக்கம், மறதி போன்றவையும் தியானத்திற்குத் தடைகள் ஆகும்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

**இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.**

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

எனவே எம்மால் முடிந்தளவு சீராக, அமைதியான சூழலில் வழிமுறைகளைக் கவனித்துத் தியானப் பயிற்சி செய்து வருவது மிகவும் சிறந்த இன்னல் தீர்க்கும் இயற்கையான வழிமுறையாகும். தியானத்தால் ஏற்படும் பயன்கள் உடனடியாகக் கிடைக்கவில்லையென ஏமாற்றம் கொள்ளாது தொடர்ச்சியாக, கவனமாகச் செய்துவர நன்மை உண்டாகும்.

யாருக்கு வாக்களிப்பது என முடிவு செய்ய இயலவில்லையா?

ஜூன் 2 ஆம் தேதி மிஸ்ஸிஸ்ஸாகா-வின் முன்னுரிமைகளுக்கு ஆதரவளிக்கின்ற வேட்பாளருக்கே வாக்களியுங்கள்

மலிவான வீட்டு வசதி
பொது பேருந்து போக்குவரத்து
நகரங்களுக்கு நிதி ஒதுக்கீடு
உள்ளூர்ப் பொருளாதாரம்

Mississauga Matters
PROVINCIAL ELECTION 2022

MISSISSAUGA
மேலும் அறிய:
mississaugamatters.ca

# ஒன்ராறியோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

சமர்ப்பிப்பது.
இவ்வாறு பழமைவாதக்கட்சி தெரிவித்துள்ளது.



ஒன்ராறியோ மாகாணத்தின் எதிர்க் கட்சியாக இருந்த புதிய ஜனநாயகக்கட்சி அதன் தலைவர் Andrea Horwathஇன் தலைமையில் இத்தேர்தலில் மாகாணம் முழுவதிலும் உள்ள 124 தொகுதிகளிலும் போட்டியிடுகிறது. புதிய ஜனநாயகக்கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் பிரச்சார அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள்:

* 10,000 தனிப்பட்ட ஆதரவுப் பணியாளர்களை (PSW) மேலதிகமாகப் பணிக்கு அமர்த்துதல்.
* 30,000 தாதி மற்றும் செவிலியர்களைப் பணிக்கு அமர்த்துவதுடன் வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற தாதி மற்றும் செவிலியர்களின் தராதரப்பத்திரத்தை அங்கீகரித்தல்.
* ஒன்ராறியோவின் வடபகுதிக்கு 300 மருத்துவர்களையும், 100 விசேட மருத்துவ நிபுணர்களையும் பணிக்கு அமர்த்துதல்.
* ஒன்ராறியோ மாகாணத்தின் குறைந்த பட்ச சம்பளத்தை மணித்தியாலத்திற்கு $20ஆக்குவதுடன் அதில் வருடாந்த உயர்வாக $1ஐ ஏற்படுத்துதல்.
* பணியாளர்களுக்கு 10 நாட்கள் அவர்களது அவசர தேவைகளுக்காக சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்குதல்.
* மேலதிகமாக 20,000 ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்துதல்.
* 4ஆம் ஆண்டு முதல் 8ஆம் ஆண்டு வரை கல்விபயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை ஒரு வகுப்பில் 24 மாணவர்களுக்கு மேல் அனுமதிக்காமல் இருத்தல்.
* 3, 6, 9 மற்றும் 10ஆம் வகுப்புகளில் நடைபெறும் மாகாணம் தழுவிய பரீட்சையான EQAOஐ இரத்துச் செய்தல்.
* ஒரு பில்லியன் மரக்கன்றுகளை 2030 ஆம் ஆண்டுக்குள் நடுதல்.
* குடியிருப்பிடங்களின் வாடகை அதிகரிப்பை அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல்.
* வாகனங்களுக்குரிய எரிபொருளின் (Gas) விலை அதிகரிப்பை அரச கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருதல்.
* குடும்ப வருமானம் $90,000இற்கு உட்பட்டவர்களின் பற்பராமரிப்புச் செலவை மாகாண அரசு ஏற்றல்.

இவ்வாறு புதிய ஜனநாயகக்கட்சி தெரிவித்துள்ளது.

லிபரல் கட்சி அதன் தலைவர் Steven Del Ducaஇன் தலைமையில் இத்தேர்தலில் மாகாணம் முழுவதும் உள்ள 124 தொகுதிகளில் 122 தொகுதிகளில் போட்டியிடுகிறது. லிபரல் கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் பிரச்சார அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள்:

* ஒன்ராறியோ மாகாணத்தின் குறைந்த பட்ச சம்பளத்தை மணித்தியாலத்திற்கு $16ஆக 2023 ஜனவரி 1 முதல் அமல்படுத்தல்.
* பணியாளர்களுக்கு 10 நாட்கள் சுகவீன விடுமுறை சம்பளத்துடன் வழங்குதல்.
* ஒன்ராறியோ மாகாணத்தில் கைத்துப்பாக்கிகள் தடைவிதிக்கப்படும்.
* தனிப்பட்ட ஆதரவுப் பணியாளர்களின் (PSW) சம்பளத்தை மணித்தியாலத்திற்கு $25 ஆக்குதல்.
* மாகாண விற்பனை வரியை $20இற்கு உட்பட்ட சமைக்கப்பட்ட உணவுகளுக்கு நீக்குதல்.
* இலாப நோக்குடன் நடத்தப்படும் நீண்டகாலப் பராமரிப்பு இல்லங்கள் 2028ஆம் ஆண்டுடன் முடிவுக்கு கொண்டு வருதல்.
* 30,000 புதிய நீண்டகாலப் பராமரிப்புப் படுக்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
* மாகாணம் தழுவிய பாடசாலைகளைப் பராமரிக்கவும் மேலதிகமாக அமைக்கவும் $10 பில்லியன் முதலிடப்படும்.
* 100,000 சுகாதாரப் பணியாளர்களைப் பணிக்கு அமர்த்துவதுடன் 3,000 பணியாளர்களுக்கு “மன நலம் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையாதல்” பற்றிய விழிப்புணர்வுப் பயிற்சியை வழங்குதல்.
* கோவிட்-19 தொற்று நோய்ப்பரவலின் போது முன்னணியில் பணியாற்றிய சுகாதாரப்பணியாளர்களது கல்விக் கடனை இரத்து செய்தல்.
* 2025-2026ஆம் நிதியாண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தை மேலதிக செலவினங்கள் இல்லாமல் சமப்படுத்தி சமர்ப்பிப்பது.

இவ்வாறு லிபரல் கட்சி தெரிவித்துள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தின் பசுமைக்கட்சி அதன் தலைவர் Mike Schreiner தலைமையில் இத்தேர்தலில் மாகாணம் முழுவதிலும் உள்ள 124 தொகுதிகளிலும் போட்டியிடுகிறது.

இம்முறை புதிதாக அமைக்கப்பட்ட ‘புதிய நீலக்கட்சி’ அதன் தலைவரான கலைக்கப் பட்ட சட்டசபையில் உறுப்பினராக இருந்த Jim Karahaliosஇன் தலைமையில் மாகாணம் முழுவதும் உள்ள 124 தொகுதிகளிலும் போட்டியிடுகிறது.

இம்முறை புதிதாக அமைக்கப்பட்ட இன்னொரு கட்சியான ‘ஒன்ராறியோக் கட்சி’ அதன் தலைவரான கலைக்கப்பட்ட சட்டசபையில் உறுப்பினராக இருந்த Derek Sloan தலைமையில் 64 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

இந்த ஆறு கட்சிகளையும் விட இன்னும் 11 கட்சிகள் மாகாணத்தில் உள்ள சில தொகுதிகளில் தங்கள் வேட்பாளர்களை நியமித்துள்ளனர். இவர்களை விட 18 சுயேட்சை வேட்பாளர்களும் சில தொகுதிகளில் போட்டியிடுகின்றனர்.

## ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில் தமிழர்!

### லோகன் கணபதி



ஏற்கனவே பழமைவாதக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த லோகன் கணபதி இம்முறையும் Markham - Thornhill தொகுதியில் போட்டியிடுகிறார்.

### விஜய் தணிகாசலம்



ஏற்கனவே பழமைவாதக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த விஜய் தணிகாசலம் இம்முறையும் Scarorough - Rouge Park தொகுதியில் போட்டியிடுகிறார்.

### நீதன் சண்



நீதன் சண் யோர்க் பிராந்திய மாவட்டப் பாடசாலை சபை உறுப்பினராகவும், ரொறொன்ரோ மாவட்டப் பாடசாலை சபை உறுப்பினராகவும் இருந்தவர். பின்னர் இவர் ரொறொன்ரோ மாநகர சபை உறுப்பினராகவும் இருந்தவர். தற்போது புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் Scarborough Centre தொகுதியில் போட்டியிடுகிறார்.

### செந்தில் மகாலிங்கம்



வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் பணியாற்றிய செந்தில் மகாலிங்கம் தற்போது புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் Markham - Unionville தொகுதியில் போட்டியிடுகிறார்.

### அனிதா ஆனந்தராஜன்



30 வருடங்களுக்கு மேல் Scarborough இல் வாழ்ந்து வரும் ஒட்டாவா பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பட்டதாரியான அனிதா ஆனந்தராஜன் மனிதவளத் துறையில் பணியாற்றி வருபவர். இவர் தற்போது லிபரல் கட்சியின் சார்பில் Scarborough - North தொகுதியில் போட்டியிடுகிறார்.



# எம்.ஜி.ஆரை நினைக்காமல் தூங்கியதே இல்லை!

## செல்வராகவன் நேர்காணல் நேர்கண்டவர்: கண்ணன்

தமிழ் திரையுலகின் தற்கால இயக்குநர்களில் முக்கியமானவர் செல்வராகவன், நடிகராக புதிய அவதாரம் எடுத்துள்ளார். இதனை முன்னிட்டு செல்வாவை ஒரு மாலை வேளையில் 'விளம்பரம்' இதழுக்காக நேரில் சந்தித்து உரையாடினோம். அமைதியாகப் பேசுகிறார்.



**திரைப்பட இயக்குநராகத் தொடங்கி இப்போது நடிகராகவும் தமிழ் திரையுலகில் தடம் பதித்திருக்கிறீர்கள். திரும்பிப் பார்க்கும்போது என்ன நினைக்கிறீர்கள்?**

சிறு வயதில் பாடுவது, வயலின் வாசிப்பது போன்றவற்றை கற்றேன். ஆனால், மனம் எதிலும் முழுமையாக ஈடுபட மறுத்து விட்டது. சரி, நமக்கு பிடித்த விஷயம் என்ன என்பதை கண்டுபிடிப்போம் என்று யோசித்தபோதுதான், படிப்பதும் எழுதுவதும் நமக்கானவை என்பது புலப்பட்டது. எழுத ஆரம்பித்தே சினிமாவுக்குள் நுழைந்துவிட்டேன். இன்று இருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒவ்வொரு நாளும் உங்களை 'அப்டேட்' செய்து கொள்ள வேண்டும். எனவே, இன்றைக்கு என்ன நாம் புதிதாகச் செய்யப்போகிறோம் என்பது மட்டும்தான் இப்போது என் மண்டைக்குள் ஓடிக் கொண்டிருக்கிறது.

**உங்கள் நடிப்பில் வெளியான முதல் திரைப்படமாக 'பீஸ்ட்' இருந்தாலும், நடிகராக உங்களுக்கு வாய்ப்பு வந்த முதல் திரைப்படம் 'சாணிக் காயிதம்'. படப்பிடிப்புத் தளத்தின் கேப்டனாக, ஒரு இயக்குநராக கேமரா பின்னால் நின்றவர் நீங்கள். இப்போது நடிப்பதற்காகக் கேமரா முன்னால் நின்றபோது எப்படி உணர்ந்தீர்கள்?**

'சாணிக் காயிதம்' படத்தின் இணைத் தயாரிப்பாளரான சித்தார்த் எனது நல்ல நண்பர். அவர்தான் என்னை இந்தப் படத்தில் நடிக்க வற்புறுத்தினார். நானும் பலவாறாக மறுத்துப் பார்த்தேன். காரணம், கேமரா முன்னால் நின்று என்னால் நடிக்க முடியும் என்று தோன்றவில்லை. நடிப்பது சலிப்பு ஏற்படுத்தும் ஒன்றாகவே இருக்கும் என்று நான் நினைத்திருந்தேன். இன்னொன்று, நம் உருவம் திரையில் அனைவருக்கும் பிடிக்குமா என்று தயங்கினேன். சிறு வயதில் இருந்தே எனக்கு என் உருவம் பற்றிய ஒரு தாழ்வு மனப்பான்மை இருந்துகொண்டே இருக்கும். அதனால் கேமரா முன்னால் மக்கள் என்னை ஏற்றுக் கொள்வார்களா என்ற பயம் இருந்தது. ஆனால், சித்தார்த்தும் இயக்குநர் அருண் மாதேஸ்வரனும் என்னை விடுவதாக இல்லை. பின்னர், கதை புதிதாகவும் வித்தியாசமாகவும் இருந்தது என்ற காரணத்தினால் ஒப்புகொண்டேன். அது படப்பிடிப்பில் ஒவ்வொரு நாளும் பல விஷயங்களை எனக்குக் கற்பிக்கும் ஒன்றாக இருந்தது. நடிப்பு சலிப்பானதாக இருக்குமோ என்று முன்பு எனக்கிருந்த எண்ணம் இப்போது முற்றிலும் மாறிவிட்டது. உண்மையில் நடிப்பு என்பது முற்றிலும் வேறு ஒரு தீவிரமான களம்.

**உங்கள் நடிப்பை பார்த்துவிட்டு உங்கள் தம்பி தனுஷ் என்ன சொன்னார்?**

ஆரம்பத்தில் இருந்து நானும் சரி தனுஷும் சரி தொழில் குறித்து அதிகம் வீட்டில் பேசிக்கொள்ள மாட்டோம். “நீ அது செய்யற, நான் இது செய்யறேன்” என்றெல்லாம் எந்தப் பேச்சு வார்த்தையும் இருக்காது. நாங்கள் அனைவரும் அண்ணன், தம்பி, தங்கை என்ற உறவைத் தாண்டி தொழில் பற்றி எதுவும் பேச மாட்டோம். அதுதான் நல்லது எனவும் நினைக்கிறேன்.

**“நானே வருவேன்” படப்பிடிப்பு முடிவடைந்துள்ளது. அதிலும் நடித்துள்ளீர்கள். குறிப்பாக தனுஷுக்கு வில்லனாக நடித்துள்ளீர்கள். அந்த அனுபவம் எப்படி இருந்தது?**

தனுஷ் கூட நடிக்கிறேன் என்பதை விட நான் நடிக்கும் கதாபாத்திரத்தில் நடிக்க வேண்டிய நடிகர் அன்று வர முடியாத சூழல். அதனால், நான் அந்தக் கதாபாத்திரத்தில் நடிக்கத் தள்ளப்பட்டேன். “நீங்கள் நடித்து விடுங்கள். இல்லை என்றால் படத்தின் பட்ஜெட்டில் இழப்பு வரும். ஷூட்டிங் நின்று விடும்” என்ற காரணங்களால் அந்தப் படத்தில் நடிகனாக்கப்பட்டேன். அதனால் அது திட்டமிட்டு எடுக்கவில்லை.

**இயக்குநர் தனுஷாவது உங்களிடம் ஆலோசனை கேட்பாரா?**

என்னிடம் எந்த ஆலோசனையும் கேட்கவில்லை. அவர் திறமை மீது எனக்கு நம்பிக்கை உண்டு. தனியாகவே படத்தை எடுத்து சாதித்தார். ஹாலிவுட் லெவலில் வளர்ந்துள்ளார். ஓர் அண்ணனாக இதைத் தாண்டியும் வளரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

**ஒரு வயதான தம்பதி, தனுஷ் எங்கள் மகன் என்று தொடர்ந்து சர்ச்சையை கிளப்பி வருகிறார்களே?**



இப்படி கூறுவது எனக்கும் எங்கள் குடும்பத்திற்கும் மிகுந்த வேதனையாகத்தான் உள்ளது. நான் வீட்டில் மூத்தப் பையன். தனுஷ் பிறந்ததிலிருந்து நான் தான் தூக்கிக் கொஞ்சுவேன். நான் வளர்த்த பையன் அவன். அம்மாவுக்கு நான்கு பிள்ளைகள் என்பதால், எல்லோரையும் பார்த்துக்கொள்ள சிரமம். அதனால், அவனை பள்ளியில் கொண்டு சென்று விடுவது, அழைத்து வருவது எல்லாமே நான்தான். அதனால், எனக்கு கூடுதல் வேதனையாக உள்ளது.

**தற்கால தமிழக அரசியல் சூழலை எப்படி பார்க்கிறீர்கள்?**

கருத்துக் கூற விரும்பவில்லை.

**சரி, நடிகர்களின் அரசியல் வருகையை எப்படி பார்க்கிறீர்கள்?**

தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)




**முன்னாள் யோர்க் பிராந்திய கல்விச்சபைத் தலைவர் மார்க்கம் நகரத்தின் ஏழாம் வட்டாரத்தில் வசிப்பவர்களுக்கு உன்னதமான பிரதிநிதித்துவத்தைக் கொண்டுவர முயல்கிறார்**

யுவனீட்டா நாதன், தற்போதைய யோர்க் பிராந்திய கல்விச்சபையின் முன்னாள் தலைவர் (YRDSB) மற்றும் தற்போதைய அறங்காவலர், மார்க்கம் நகரின் ஏழாம் வட்டாரத்துக்கு அடுத்த நகரசபை உறுப்பினராக ஆவதற்கு முயற்சி எடுக்கிறார்.

“எனது குடும்பம், நண்பர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களோடு கலந்தாலோசித்த பிறகு, நகர அளவில் உள்ளூர் பிரச்சினைகளுக்கான எனது நிலைப்பாட்டை முன்னெடுக்க, 2022 ஒக்ரோபரில் நடைபெற உள்ள மார்க்கம் மாநகராட்சித் தேர்தலில் ஏழாம் வட்டாரத்துக்கான நகரசபை உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட முடிவு செய்துள்ளேன்” என்று யுவனீட்டா நாதன் தனது விருப்பத்தை அறிவித்துள்ளார்.

“ஏழாம் வட்டாரத்தில் நீண்டகாலமாக வசிப்பவள் என்ற முறையில், இந்த வட்டாரத்தில் வசிப்பவர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் சமமானதாகவும், நிதி ரீதியாக நிறைவானதாகவும் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் வலுவானதாகவும், பாதுகாப்பானதாகவும், அனைத்துச் சமூகங்களையும் உள்ளடக்கியதாகவும் அமைக்க நான் உறுதிபூண்டுள்ளேன்” என்று யுவனீட்டா நாதன் மேலும் கூறியுள்ளார்.

யுவனீட்டாவுக்கு மார்க்கத்தில் வசிப்பவர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுச் சேவையில் ஒருதசாப்தத்திற்கும் மேலான அனுபவம் உள்ளது. யுவனீட்டா 2010 ஆம் ஆண்டு முதல் YRDSB அறங்காவலராக இருந்து வருகிறார். அவரது பதவிக்காலத்தில் YRDSB இன் துணைத் தலைவராகவும், தலைவராகவும் பணியாற்றியுள்ளார். அவர் ஒரு அறங்காவலராகப் பணியாற்றுவதோடு, யோர்க் பிராந்தியத்தில் உள்ள சமூக சேவை நிறுவனத்தில் சமூக ஆதரவுப் பணியாளராகவும் குடும்ப ஆலோசகராகவும் உள்ளார்.

Brock பல்கலைக்கழக பட்டதாரியான இவர், சமூக சேவைக்கான மகாராணியின் வைரவிழாப் பதக்கத்தையும் பெற்றவர். யுவனீட்டா சமூக மாற்றத்துக்கான செயற்பாட்டாளர். கனடிய உதவு சங்கம் - யோர்க் , சிம்கோ, மார்க்கம் தமிழ் அமைப்பு உட்பட பல்வேறு சமூக அமைப்புகளின் இயக்குநர் சபைகளில் பங்கெடுத்து ஆற்றிய சமூக சேவைகளுக்காக நன்கு அறியப்பட்டவர்.

“எங்கள் சமூகத்திற்கு மூன்று தடவைகள் அறங்காவலராகச் சேவையாற்றும் பெருமையும் பாக்கியமும் எனக்குக் கிடைத்துள்ளது. இந்த ஆண்டுகளில், நான் பல குடியிருப்பாளர்களைச் சந்தித்து அவர்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் பரந்த அளவிலான உள்ளூர் விடயங்களில் அவர்களின் எண்ணங்களைக் கேட்டிருக்கிறேன்”, என்று யுவனீட்டா நாதன் கூறியிருக்கிறார்.

“வரவிருக்கும் மாதங்களில், ஏழாம் வட்டாரத்தில் வசிப்பவர்களுடன் இணைந்து பணியாற்றும் சூழலை எதிர்பார்க்கின்றேன். மற்றும் எங்கள் சமூகங்களுக்கான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர்ப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த ஆவலோடு இருக்கிறேன்” என்று கூறி முடித்தார் யுவனீட்டா நாதன்.

மேலதிக விபரங்களுக்கு 416 857 6308



**சுவாமி விபுலாநந்தர் தமிழ் ஆய்வு மையம் கனடா**



**அறுபதாம் ஆண்டு பாராட்டு விழாவும் நூல்வெளியீடும்**

திரு. சின்னையா சிவநேசன் B.Sc.,B.Ed.,OCT ,ESL .

மதிப்புக்குரிய திரு. சின்னையா சிவநேசன் அவர்களின் 60 ஆண்டுகால கல்வி, சமூகம், சமயம், ஊடகம் ஆகிய துறைகளில் ஆற்றிய பணிகளைப் பாராட்டும் வைபவமும் நூல் வெளியீடும்

இடம்: ஸ்காபரோ நகர மண்டபம் (Scarborough Civic Centre 150 Borough Dr, Scarborough, ON M1P 4N7

காலம்: மே 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி

வெளியிடப்படும் நூல்கள்
1. நினைவில் நிற்பவை (சுய வரலாறு)
2. காலத்தால் அழியா ஆங்கிலக் கவிதைகள் (தமிழ் வடிவம்)
3. நரி மாப்பிள்ளை ( திருத்திய பதிப்பு ) ஒரு சிறு நாடகம்

நூல் விமர்சனம்
திரு. சின்னத்தம்பி சண்முகராஜா M.A
பேராசிரியர் வண. அ. ரோ சந்திரகாந்தன்
ஆசிரியர் வி. திவ்யராஜன்


மேற்படி விழாவுக்கு நமது மைய உறுப்பினர்கள் அண்ணாமலை கனடா வளாகத்தின் விரிவுரையாளர்கள் மாணவர்கள், ஊடக நண்பர்கள், பல்வேறு தொழில்சார் நிபுணர்கள், வர்த்தக அன்பர்கள், பல்வேறு சங்க உறுப்பினர்கள், பல்வேறு முதியோர் சங்க உறுப்பினர்கள் அவரது நண்பர்கள், உறவினர்கள் நலன்விரும்பிகள் யாவரையும் வருகை தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம்
தலைவர்

க. குமரகுரு M.A
செயலாளர்

# பகவத்கீதையை மொழிபெயர்ப்பதில் மேலைநாட்டவரின் பங்களிப்பு

செல்வி. வருணா சந்திரகுமார்
இறுதியாண்டு மாணவி,
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை



சனாதன சமயமாக விளங்கும் இந்து சமயமானது ஓர் எல்லைக்குள் வரையறுக் கப்படாத சமயமாக விளங்குகின்றது. இதனை அதன் தொன்மையும் மேன்மை யையும் பறைசாற்றுகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்து சமயமானது இன்று உலகளாவிய ரீதியில் பரந்து விரிந்து காணப்படுவதற்கு முக்கிய காரணமாக மேலைத்தேசத்தவர் வருகை காணப்படு கின்றது. மேலைத்தேசத்தவரின் வருகை யானது கிறிஸ்தவ மதத்தை பரப்புதல், வர்த்தகம் மற்றும் குடியேற்றவாதம் போன்ற நோக்கில் அமைந்தது. இதனை மெருகூட்டுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்ட மேலைத் தேசத்தவரின் தற்செய லாக அல்லது நினையாப்பிரியமாக நிகழ்ந்தவற்றின் பக்கவிளைவு தான் இந்து சமயம் மேலை நாடுகளில் பரவியமைக்கு அடித்தளமாக அமைந்தது எனலாம்.

இவ்வாறான அணுகுமுறை மாறி பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய இலக்கியம், தத்துவம், மொழி மீதான ஆர்வம் மேலை நாட்டினரை இதன்பால் கவர்ந்துள்ளது. இந்து பாரம்பரியங்களை அறிய அறிய இந்து பண்பாடு மீதும் அதன் பனுவல்கள் மீதும் சமஸ்கிருத மொழியின் மீதும் ஈடுபாடு மற்றும் ஈர்ப்பு அதிகரித்தது எனலாம். இவர்களது இத்தகைய ஆர்வமும், ஈடுபாடும், தேடலும், தேவைப்பாடும் இந்து சமயத்தின் அடிப்படை இலக்கியங்களை மொழிபெயர்ப்பு என்னும் ஒரு பெரிய முயற்சியில் ஈடுபடுத்தி இந்து சமயத்திற்குப் பங்களிப்பு ஆற்ற வழிவகுத்தது.

மொழி என்பது தொடர்பாடலுக்கு இன்றி யமையாதது. உலகம் ஒன்று எனினும் மொழிகள் 6500 எனப்படுகின்றது. "translatio" என்ற லத்தீன் மொழியில் இருந்து வந்த "Translation" என்ற ஆங்கிலச் சொல் கொண்டு செல்லுதல் என பொருள் கொள்ளப்பட்டு ஒரு மூலமொழி [Source Language] பிரதியின் கருத்தை சிதைவுறாது, பொருள் மாறாது இலக்கு மொழியின் [Target Language] வாயிலாக வெளிப்படுத்துவ தாக மொழிபெயர்ப்பு காணப்படுகிறது. இத்தகைய மொழி பெயர்ப்பில் மேலை நாட்டவரால் அதிகம் கவரப்பட்ட ஒன்றாக பகவத்கீதை திகழ்கிறது.

இந்து சமயத்தின் சிறப்பிற்கு அடிப்படை யாகவும் ஆணிவேராகவும் இருப்பது இந்து சமய இலக்கியங்கள் என்று கூறினால் அது மிகையாகாது. அந்தவகை யில் இந்து மதத்தின் முதன்மையான முப்பெரும் நூல்களான பிரஸ்தான திரயத்தில் ஒன்றாக பகவத்கீதை விளங்கு கின்றது. மகாபாரத இதிகாசத்தில் பீஷ்ம பருவத்தில் 700 ஸ்லோகங்களையும் 18 அத்தியாயங்களையும் கொண்டு அமைந்த ஒரு தனி இலக்கியமாக பகவத்கீதை காணப்படுகின்றது. இது கிருஷ்ண பகவானின் வாய்மொழி உபதேசமாக விளங்குகின்றது. இத்தகைய புனித நூல் இன்று இந்தியா, இலங்கை மட்டுமல்லாது நாடு, இனம், மொழி, சமயம் என எதுவித மாறுபாடும் இன்றி கடல் கடந்து மேற் குலக நாடுகளில் செல்வாக்குப் பெற்று உலக இலக்கியமாக சிறப்புற்று விளங்கு வதற்கு மேலை நாட்டு அறிஞர்களின் இத்தகைய மொழிபெயர்ப்பு பங்களிப்பு அளப்பரியதாக காணப்படுகிறது. இன்று வரை 100க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்கப்பட்டதாக அறியப்படுகிறது.

| மொழிபெயர்ப்பாளர் | ஆண்டு | மொழி | Edwin Arnold | 1900 | ஆங்கிலம் |
|---|---|---|---|---|---|
| Abdul Rahman chisti | 1654 | பாரசீகம் | Annie Besant | 1907 | ஆங்கிலம் |
| Abul Fazal | 1526-1712 | பாரசீகம் | Charles johnston | 1908 | ஆங்கிலம் |
| Jr,Charles wilkins | 1785 | ஆங்கிலம் | Ernest wood 1954 | ஆங்கிலம் | |
| Abbe parraud | 1787 | பிரெஞ்சு | R.C Zaehner | 1969 | ஆங்கிலம் |
| N.I.Novikov | 1787 | ரஷ்ய | Angelika maliner | 2007 | ஆங்கிலம் |
| Fariedrich Vonmager | 1802 | ஜேர்மன் | G.F.B Feuerstein | 2011 | ஆங்கிலம் |
| Wilhelm vonschegel | 1823 | இலத்தீன் | D.J.Fowler | 2012 | ஆங்கிலம் |
| Jean Denis langunais | 1832 | பிரெஞ்சு | | | |
| Lessens | 1846 | பிரெஞ்சு | | | |
| Demetrions Galaons | 1848 | கிரேக்கம் | | | |
| Emile Louis Burnouf | 1861 | பிரெஞ்சு | | | |

இவை மட்டுமல்லாது எண்ணில் அடங்காத மேலைநாட்டினர் பல்வேறு மொழிகளில் தங்களது மொழிபெயர்ப்பு பங்களிப்பினை ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ் வாறாக மேலைநாட்டவர் பகவத் கீதையை மொழிபெயர்ப்பதற்கு அடிப்படையான காரணங்களும் தூண்டுதல்களும் முதன்மை யானதாக நோக்கப்பட வேண்டியவை ஆகும். அந்த வகையில் கிறிஸ்தவ மதத்தை பரப்புவதற்கு இந்து சமயத்தின் அடிப்படை பண்பாடுகளை அறிந்து கொள்வதற்காக ஆங்கிலேயர்களால் இந்தியாவில் சமஸ்கிருத மொழி மூல கல்லூரிகள் ஆசியக்கழகம் போன்ற அமைப்புகளின் ஊடாக உருவாக்கப்பட் டன. இவற்றின் வாயிலாக சமஸ் கிருதத்தை கற்று இந்து பனுவல்களில் ஆர்வமும் ஈடுபாடும் மேலைத்தேசத்தவர் களுக்கு ஏற்பட சுயநலமற்ற போக்கின் காரணமாகப் பகவத்கீதையை மொழி பெயர்த்தனர். அதாவது பகவத்கீதையின் மூல மொழியான சமஸ்கிருதத்தை கற்க வாய்ப்பும் வசதியும் மேலை நாட்டவர் களுக்கு அதிகமாகக் காணப்பட்டமை முதன்மைக் காரணமாகத் திகழ்கின்றது.


இத்தோடு முக்கியமான விடயமாக இந்து சமய ஆளுமைகளின் வெளிநாட்டுப் பயணங்களும் குறிப்பிடத்தக்கன. அந்த வகையில் சுவாமி விவேகானந்தர், ராதா கிருஷ்ணர், ராமநாதன், விபுலானந்தர் போன்றோர் முதன்மையானவர்களாகக் காணப்படுகின்றனர். 1893ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவு குறிப்பிடத்தக்க ஒன்றாகும் அதாவது இச் சொற்பொழிவினால் ஈர்க்கப்பட்ட மார்க்கெட் நோபில் அவர்கள் பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்தமை சிறப்பான விடய மாகக் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டும். மேலும் பல ஆன்மீகத் தலைவர்களின் போதனைகள் இவற்றிற்கு வழி வகுத் திருக்கலாம் எனக் கொள்ளப்படுகின்றது. அவை வருமாறு:

1944 -The Gita - சுவாமி பிரபவானந்தா.
1968 -Bhagavad Gita As it is - சுவாமி பிரபுபாதர்.
1996- The Holi Gita - சுவாமி சின்மானந்தர்.
2003- The Bhagavad Gita - சுவாமி சிவானந்தர்

ஆகியோரைக் குறிப்பிட்டு கூறலாம்.

பகவத் கீதையின் மேலை நாட்டவரின் மொழிபெயர்ப்பில் சமய நிறுவனங்களும் செல்வாக்கு செலுத்துகின்றன. இந்நிறு வனங்கள் பகவத்கீதையை அடிப்படை யாகக் கொண்டு செயற்படுகின்றமையைக் காணலாம்.

அந்தவகையில் முதன்மையானது அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் பக்தி வேதாந்த புத்தக அறக்கட்டளை மூலம் 40 மேலை நாட்டு மொழிகளிலும் 16 இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. இவ்வியக்கம் ஆனது இணையதளம் [www.iskcon.org] மூலம் பகவத்கீதையை கற்பதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்தி யுள்ளது. இத்தோடு சர்வதேச கீதைக் கழகம் [International Gita Society] சுமார் 15 மொழிகளில் பகவத் கீதையை மொழி பெயர்த்து உள்ளது.




5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இவ் இலக்கியமானது மேலை நாட்டினரைக் கவர்ந்துள்ளது. இதன் முக்கியத்துவமும் செய்தியும் வெளிப்படையாகவே உலக ளாவிய ரீதியில் உள்ளது. சிறப்பு வாய்ந்த பகவத்கீதையின் பொருள்மரபு எல்லா மக்களுக்கும் எந்தவித வேறுபாடுமின்றி ஆற்றல்மிக்க நன்மைகள் நிரம்பியுள்ள தால் இதனை தங்களுடைய மேலை நாட்டு மக்கள் அறிந்து கற்று அவற்றின் பயன்களின் ஊடாக உத்வேகத்தை அடைய வேண்டுமென்ற நோக்கில் இத்தகைய சிறப்பு வாய்ந்த பகவத் கீதையை தங்களுடைய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்தனர் என்பது அறியத் தக்க விடயமாகும்.

ஆக தொகுத்து நோக்குமிடத்து மொழி பெயர்ப்பு என்பது படைப்பு இலக்கியத் திற்கு நிகரானது. இத்தகையை மேலைத் தேசத்து அறிஞர்களின் பகவத்கீதை மொழிபெயர்பினால் இந்து சமயமானது பரந்து விரிவுபடுத்தப்பட்டது எனலாம். இதனை அங்கு நடைபெறும் நிகழ்வுகள் இன்று வரை ஆதாரப்படுத்திய வண்ணமே

தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)



# சர்வதேச உழைப்பாளர் தினம்




யதுசனா சவுந்தரராசா
அகவை 18

ஒவ்வொரு வருடமும் மே மாதம் 1ஆம் திகதி 'மே தினம்' எனப்படும் உழைப்பாளர் தினமானது உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. பல நாடுகளிலும் அன்றையதினம் பொதுவிடுமுறையாக இருப்பதுடன் தொழிலாளர்கள் தம் அயராத உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவதற்கு விடுமுறை வழங்கப்படும்.

நம் நாளாந்த வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு சிறிய பொருட்களின் பின்னாலும் அதற்காகத் தன் நேரத்தையும், முயற்சியையும் அர்ப்பணிக்கும் தொழிலாளர்களின் உழைப்பு உள்ளது.

எந்தவொரு உற்பத்தித் துறையாயினும் மூலப்பொருட்களின் இருந்து நாம் பயன்படுத்துகின்ற முடிவுப் பொருட்களைத் தயாரிக்கும் வரையில் பலவேறுபட்ட படிகளிலும் பல்வேறு உற்பத்திச் செயல்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இயந்திர மயமாக்கப்பட்ட இன்றைய உலகில் தம் உடலை வருத்தி உழைத்துச் சேவைப் புரியும் உழைப்பாளர்கள் என்றும் உயர்ந்தவர்களே. எமது அன்றாட வாழ்வில் நேரடியாகப் பெறும் சேவைகள் மட்டுமல்லாது மறைமுகமாகவும் அதன் பின்னால் பலரினதும் உடல் உழைப்பும் உள்ளது. அந்த வகையில் நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் உழைப்பாளர்களை போற்றிக் கௌரவிக்கும் விதமாக கொண்டாடப்பட்டு வரும் மே தினம் பற்றி நாம் அறிந்திருத்தல் அவசியமாகும்.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவின் சிகாகோ நகரில் தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தி அவர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டத்திலிருந்தே மே தினத்தின் வரலாறு தோற்றம் பெறுகின்றது. உழைப்பாளர்கள் தமது உரிமைகளையும், 8 மணிநேர வேலை மற்றும் ஊதிய உயர்வு போன்றவற்றை தமது கோரிக்கையாக முன்வைத்தனர். அக்காலத்தில் 16 மணி நேரம் வேலை செய்வது சாதாரண விடயமாகப் பார்க்கப்பட்டதுடன் முதலாளி வர்க்கத்தினரால் தொழிலாளர்களின் உழைப்பானது பெருமளவில் சுரண்டப்பட்டது. எல்லோரும் ஒன்றுசேர்ந்து செயற்படுவதன் மூலமே உரிமைகளைப் பெற முடியும் என உணர்ந்த பாட்டாளி வர்க்கத்தினர் புரட்சியைக் கையிலெடுத்தனர். அந்தவகையில் சிகாகோ நகரில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் ஒன்று திரண்டு பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். போராட்டத்தின் மூன்றாவது நாள் 65000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் இணைந்துக் கொண்டனர். 1886 ஆம் ஆண்டு மே மாதம் இப்புரட்சியானது மேலும் வலுப்பெற்றது. தொழிலாளர்களின் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த ஏவப்பட்ட ஆயுதம் தாங்கிய பொலிஸாருக்கும் தொழிலாளருக்கும் ஏற்பட்ட மோதலில் 4 தொழிலாளர்கள் உயிரிழந்ததுடன் நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர். இதனை எதிர்த்து உழைப்பாளர் வர்க்கத்தினர் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஹேய்மார்கெட் (Haymarket) சதுக்கத்தில் ஒன்று திரண்டனர். அமைதியான முறையில் நடை பெற்ற இப்பேச்சுவார்த்தையானது கூட்டம் அதிகரிக்க, அதிகரிக்க அசாதாரண நிலைமையை அடையத்




தொடங்கியது. பொலிஸார் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்ற போது கூட்டத்தினுள் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பொலிஸார் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் 6பேர் காயமடைந்தனர். தொடர்ச்சியாக நீடித்த வன்முறையில் மேலும் 7 பொலிஸாரும் 4 தொழிலாளர்களும் உயிரிழந்தனர். 60க்கும் மேற்பட்ட பொலிஸார் காயம் அடைந்ததுடன் பொதுமக்களும் பாதிக்கப்பட்டனர்.

குண்டு வெடிப்பில் பொலிஸார் உயிரிழந்தமைக்கு குற்றவாளிகளாக அடையாளப்படுத்தப்பட்டு 8 தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை மற்றும் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். தொழிலாளர்களின் உரிமைக்காக குரல்கொடுத்து பலவேறு தியாகங்களை செய்து மேற்கொள்ளப்பட்ட இப்போராட்டத்தின் விளைவாக தொழிலாளர்கள் தமது அடிப்படை உரிமைகளையும் பெற்றுக் கொள்ளும் இயலுமை ஏற்பட்டது. இதன் நினைவாக மே மாதம் 1ஆம் திகதியை தொழிலாளர தினமாக மே 1, 1889இல் கூடிய சர்வதேச தொழிலாளர் சங்கம் அறிவித்தது.

இன்று உலகம் முழுவதும் உழைப்பாளர்களைப் போற்றும் மே தினம் கொண்டாடப்படுவது பல தடைகளையும், இழப்புக்களையும், தியாகங்களையும் கடந்துபெற்ற மாபெரும் வெற்றியின் குறியீடே ஆகும்.

இது இவ்வாறிருக்க, சமூகத்தில் தொழிலாளர்களின் இன்றைய நிலை எவ்வாறிருக்கின்றது எனப் பார்ப்போமேயானால், உற்பத்தித் துறையானது வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் பல்வேறு தொழிற்சாலைகளும் தோற்றம் பெற்றுள்ளன. ஆகவே, பரந்த வேலைவாய்ப்பு காணப்படு மிடத்து தொழில்துறையில் ஈடுபடுவோர் எண்ணிக்கையும் அதிகமாகும். ஆகவே நாட்டின் பொருளாதாரத்தில் தொழிலாளர் களின் பங்கு மிகப் பெரியது என்றால் மிகையாகாது. தொழிற்சாலைகள், தேயிலைத் தோட்டங்கள், சுரங்க கைத்தொழில், விவசாயம், போக்குவரத்து, சுத்திகரிப்புத் தொழில் போன்ற அனைத்துத் தொழில்கூடங்களிலும் வியர்வை சிந்தி பாடுபடும் உழைப்பாளர்களாலேயே சமூகத்தின் அன்றாட செயற்பாடுகளும் தடையின்றி நடைபெறுகின்றது.

ஆகவே சமூகத்தின் இயக்கத்தில் முதுகெலும்பாக செயற்படும் தொழிலாளர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். இன்றைய காலத்திலும் கூட தொழிலாளர்களின் உழைப்பானது முதலாளி வர்க்கத்தினரால் சுரண்டப்பட்டு வருகின்றது. உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படாமை, இன்றைய தொழிலாளர் எதிர்நோக்கும் மிகப்பெரும் சவாலாகும். ஆயினும், இன்றைய போராட்ட முறைமையானது வன்முறைக்கு அப்பாற்பட்டதாக இருப்பது சிறந்த நிலையாகும். உழைப்பாளர்கள் தமது உரிமைகளை முன்வைத்து அமைதியான முறையில் வேலைத் தவிர்ப்பில் ஈடுபடுவது அவதானிக்கத்தக்கதாக உள்ளது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகையில் போக்குவரத்து முதற்கொண்டு அனைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைகின்றன. ஆகவே சமூகத்தின் இயக்கத்தில் பல்வேறு வகிபங்கினையும் ஆற்றுகின்ற உழைப்பாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்குப் பின்னால் அவர்களின் உழைப்பை எதிர்பார்த்திருக்கும் குடும்பம் ஒன்று இருக்கும். எனவே உழைப்புக்கேற்ற ஊதியம் என்பது ஓர் அடிப்படை உரிமையாகும். அது பேணப்பட வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமல் இருத்தல் மற்றும் உழைக்கும் வருமானம் குடும்பத் தேவைக்குப் போதுமானதாக இல்லாதிருத்தல் போன்ற காரணங்களால் சிறுவர்கள் தொழிலில் ஈடுபடும் நெருக்கடி நிலைமைகளும் பல குடும்பங்களில் ஏற்படுகின்றன. உணவுத் தேவைக்கே வருமானம் போதாத நிலையில் இருக்கும் குடும்பங்கள் பிள்ளைகளின் கல்விக்கு செலவு செய்வது என்பது எட்டாக் கனியாக இருக்கின்றது. இதன் விளைவாக சிறுவர்களும் பெற்றோருடன் வேலையில் ஈடுபடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். கட்டடப் பகுதிகள், மீன்பிடித்தல், சுரங்கத்தொழில் போன்ற ஆபத்தான தொழிற்பகுதிகளில் சிறுவர்கள் ஈடுபடுவது ஆபத்தான நிலைமையாகும். ஆகவே, போதுமான வரையில் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவாறாவது தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும். தொழில் கூடங்களில் ஏற்படும் விபத்துக்களிலிருந்து பாதுகாப்பு மற்றும் காப்புறுதி வழங்கப்பட வேண்டும்.

தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டுவது என்பது முறையற்ற செயலாகும். முற்றும் முழுதாக அவர்கள் உடல் உழைப்பை வழங்கி செய்யும் வேலையும் நிறுவனங்கள் தமது இலாபத்தை நோக்காகக் கொண்டு தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்காமல் இருத்தல் வேதனைக்குரிய விடயமாகும். ஆகவே தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

சமூகத்தின் அங்கமாக இருக்கும் ஒவ்வொரு மனிதரும் ஏதோ ஒருவகையில் அன்றாடம் தொழிலாளர்களின் உதவியின் மூலமே இயங்குகின்றனர். உண்ணும் உணவு, உடுத்தும் உடை, அன்றாட பாவனைப் பொருட்கள், பயன்படுத்தும் சேவைகள் என அனைத்தும் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொரு தொழிலாளர்களின் உடல் உழைப்பையும் கொண்டே எம் இறுதிப் பாவனைக்குக் கிடைக்கின்றன.

தொழிலாளர்களால் நாட்டின் நாளாந்த இயக்கம் பேணப்படுகிறது. போக்குவரத்து, தொடர்பாடல் போன்றன தடையின்றி நிகழ்கின்றன. நாட்டின் சுகாதாரம் பேணப்படுகிறது. உணவு உற்பத்தி மற்றும் ஏனைய தொழில்கள் போன்றனவும் மேற்கொள்ளப்படுகின்றன. என்னதான் கணினி மயப்படுத்தப்பட்ட உலகில் நாம் வாழ்கின்றோமாயினும் தொழிலாளர்களின் உழைப்பே எந்தவொரு உற்பத்தித் துறையிலும் பிரதான வளமாக இருக்கின்றது.

ஆகவே நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் உழைப்பாளர்களைப் போற்றி அவர்களின் சேவைகளைக் கௌரவித்து அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட அனைவரும் முன்வருவோமாக.

அனைவருக்கும் மே தின நல்வாழ்த்துகள்.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 .754 .7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

## BASEMENT FOR RENT

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.859.7980**

---

**BIRCHMOUNT & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately. Couple, students, seniors preferred.
**416.492.6817 / 647.403.0893**

---

**VICTORIA PARK & LAWRENCE**
1 bedroom bsmt for rent at a beautiful location. Sep. entrance, parking. Closet to TTC, Park & Hindu temple. Ladies preferred.
**416.288.9575 / 647.762.9575**

---

**NEILSON & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Room also available. Couple or female preferred. Close to Malvern Town Center. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**Call 416.875.4257**

---

**WARDEN & FINCH**
1 bedroom bsmt for rent. Parking, laundry, cable, internet. Single/couple preferred. Close to all facilities. Avail. June 01, 2022.
**Call 416.756.4258**

---

**MORNINGSIDE & SHEPPARD**
2 bedroom brand new bsmt for rent. Sep. entrance. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **416-509.5750**

---

**BIRCHMOUNT & SHEPPARD**
**2 bedroom bsmt for rent. Sep. entrance. Students couple or small family preferred. Avail. May 01, 2022.**
தொடர்புகளுக்கு: **416.899.9199**

---

**AJAX**
2 Bedroom bsmt for rent. Closeto all facilities.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**
2 Bedroom Basement for rent. Sep. entrance. Parking, laundry. 3 minutes walking distance to steeles Road. Steps to school. No pets & No Smoke. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.991.4437**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & LAWRENCE**
**2 Bedrooms & 2 washrooms bsmt for Rent. Close to mall, library, hospital & 24 hrs. TTC. Avail. May 15, 2022.**
தொடர்புகளுக்கு: **416.904.7212**

32 ஆவது ஆண்டில்
**விளம்பரம்**
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## ROOM FOR RENT

**BIRCHMOUNT & FINCH**
One room for rent in a condo. Students, Working ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.670.6542**

---

**PHARMACY & FINCH**
One room for rent in upstairs. Sep. washroom. Close to all facilities. Avail. May 15 , 2022.
தொடர்புகளுக்கு:: **416.201.1222**

---

**TAPSCOTT & MCLEVIN**
A large bedroom for rent in a townhouse. Sharing the house with another female. Internet, parking, laundry. Only female tenant. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.262.4973**

---

**BRIMLEY & EGLINTON**
2 Room for rent. Laundry. No smoke. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.294.0193**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**NEILSON & FINCH**
3 Bedroom & 2 Bathroom bsmt for rent. Sep. entrance, laundry, parking. Spacious living room, dinning room & kitchen. Close to HWY 401& 24 hrs. bus route. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: **647.989.0463**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & EGLINTON**
3 Bedrooms 2 washrooms **bsmt** for rent.
**MORNINGSIDE & LAWRENCE**
3 bedrooms walkout 2 full washrooms **Bsmt** for rent. Parking, sep. laundry. Avail. June 01, 2022.
தொடர்புகளுக்கு : **647.981.1997**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, 24 hrs. bus stop, Go Station. Small family / Couple preferred. Avail. May 15, 2022.
தொடர்புகளுக்கு: **416.737.0049**

## BASEMENT FOR RENT

**MIDDILFIELD & FINCH**
Basement for rent. Sep. entrance. Male preferred. Close to TTC & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.707.6095**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to Costco & all facilities. Avail. May 15, 2022.
தொடர்புகளுக்கு: **416.300.7595**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & HIGHGLEN**
2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. Washer, dryer, fridge, stove, dishwasher &1 parking. Prefer small family. Rent $1,350. Avail. immediatley. Pls. Call - Sarves: **416.726.8403**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. 2 mins. walk to Markham Road. Close to all facilities. Avail. June 05, 2022.
தொடர்புகளுக்கு: **647.205.7194**

## BASEMENT FOR RENT

**14TH AVENUE & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, Laundry. Close to elementary school, park & bus. Avail. immediately.
**416.904.7531 / 416.558.4929**

## BASEMENT FOR RENT

**BROCK & KINGSTON**
1bedroom brand new bsmt for rent. Sep. entrance, 1 parking, walking distance to Pickering Town center, close to transportation. No pet & No smoking. Avail. immediately.
**416-731.8542 / 416-301.4783**

## HOUSE FOR RENT

**NEILSON & SHEPPARD**
**4 bedrooms house for rent.Also 2 bedroom for rent. Sep. entrance. Parking.**
தொடர்புகளுக்கு: **416.409.6480**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
3 Bed room bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Immediatley.
தொடர்புகளுக்கு: **647.703.3254**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Including Utilities. Close to all facilities. Avail. immediatley.
தொடர்புகளுக்கு: **416.523.1677**

## BASEMENT FOR LEASE

**MCCOWAN & 14TH AVENUE**
TWO BEDROOMS +TWO WASHROOMS +ONE PARKING SPOT, SEPARATE ENTRANCE, Ensuite Laundry (Not Shared)
PRICE - $1650+33% UTILITIES.
MORE INFO CALL: **416.303.0910**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELLESMERE**
3 Bed room bsmt for rent. Sep. entrance, parking, laundry.Close to Centennial College and Schools. 2 Mins walk to TTC. No pets & smoke. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.706.5914**

## BASEMENT FOR RENT (ALSO ROOMS)

**KENNEDY & EGLINTON**
**LIVING, BEDROOM & KITCHEN + ALL FACILITIES.**
**PARKING - PRIVATE ENTRANCE**
**PLEASE CALL:**
**416.285.4695/ 647.636.2364**

## BASEMENT FOR RENT

**TAPSCOTT & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry with air condition. Close to TTC, mall,school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.829.9797**

மேலும் பக்கங்கள் 13,15,16,17

## BASEMENT FOR RENT

**BRIMLEY & LAWRENCE**

1 bedroom walk-out bsmt. for rent. Sep. entrance, sep. laundry, washroom & Kitchen. Spacious and bright backyard with trees. Close to all facilities. Avail. Immediately.

தொடர்புகளுக்கு: **416.648.7283**

## ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**

**1 Large room for rent in an apt. with furniture. Parking , internet. No smoking / No pets. Close to all facilities. Avail. immediately.**

தொடர்புகளுக்கு: **416.276.6884**

## HOUSE / BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**

4 Bedroom House for rent. Also 2 bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to all facilities. Avail immediately.

**647.858.2290 / 647.534.9897**

## HOUSE FOR RENT

**MARKHAM & 16 th AVENUE**

4 Bedrooms house for rent. 2+1 washrooms. Including 2 bedroom bsmt with kitchen & washroom. 3 car parking. Close to South Asiyan, Go station, No Frills, food Basics. Avail. June 15th , 2022.

தொடர்புகளுக்கு: **647.405.1962**

## BASEMENT FOR RENT

**ELLESEMERE & NEILSON**

2 Bedroom bsmt. for rent. Also one bedroom bachelor apt. for rent. Walking distance to College , U of T & Schools. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.880.3636**

## ROOM FOR RENT

**RICHMOND HILL**

**( YOUNG & ELGINMILLS)**

வயோதிப குடும்பத்தினர் வாழும் வீட்டில் ஓர் அறை வாடகைக்கு கொடுக்கப்படும். Close to bus stop. Without car and retired peple mostly welcome.

தொடர்புகளுக்கு: Raja - **416.454.1893**

## CONDO. FOR RENT

**MARKHAM & DENISON**

2 Bedroom plus Den & 2 washroom Condo. for rent. 1 underground parking, visitor parking & gym. Close to Spiceland, Costco, Home Depot , Community Center, Public transit & HWY 407 & all other facilities. No pets, no smoking. Avail. July 01, 2022.

தொடர்புகளுக்கு: **647.448.7552**

## HOUSE FOR RENT

**Markham Rd. & Sheppard Ave.**

3 Bedroom house for rent. 2 Full washrooms & Separate laundry room. Steps to TTC, School & Grocery stores. No pets. Avail.immediately.

தொடர்புகளுக்கு: **416.558.2228**

## BASEMENT FOR RENT

**14 th AVENUE & 9th LINE MARKHAM**

**2 bedroom newly built bsmt for rent. 2 full washrooms. Good location & Close to schools & HWY.**

தொடர்புகளுக்கு: **416.918.9848**

## ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**

1 Room for rent in a bsmt. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.825.0566**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**

1 Bedroom basement for rent.

**STAINES & MORNINGSIDE**

2 Bedroom walkout basement for rent.

3 Bedrooms house for rent.

**Contact: 647.686.8590**

## வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo, Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்:

**647.402.2937**

## HOUSE / BASEMENT FOR RENT

**MARKHAM & EGLINTON**

3 Bedroom house for rent. (Single rooms available.) Parking, laundry. Also 1 bedroom bsmt. for rent. Sep. entrance & close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.906.2520**

## ROOM FOR RENT

**KENNEDY & EGLINTON**

1 Room for rent in a 2 bedroom aprt. Working Students, 65+seniors preferred. Close to TTC, Kennedy subway. No pets, smoking, drinking. Avail. immediately

**416.857.5252 / 416.752.4444**

## வாடகைக்கு கொடுத்திட,பெற்றிட

Rooms: 5 BR, 4 BR, 3 BR, 2 BR, 1 BR APT, House, Condo, Basement GTA, Totonto, Scarborough, york, Peel, Durham, Halton ஆகிய பகுதிகளில்

**A1 Canada Rental Services**

**MR Ratha Francis Xavier**

**416.857.5252 / 416.752.4444**



## BASEMENT FOR RENT

**MARKHAM & 14th AVE.**

2 bed room bsmt for rent. 1 washroom, Sep. entrance. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.296. 7932**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR House, Condo, Basement**

வாடகைக்கு உள்ளது.

அழையுங்கள்- **647.861.8240**

## ROOMS FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

Multiple bedrooms available with bathroom & kitchen. தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).

Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## HOUSE / BASEMENT FOR RENT

**MCCOWAN & ALTON TOWER**

4 bedrooms, 2 1/2 washrooms Detached two story house for rent. & 2 parking. Available as of immediately.

1 bedroom Basement for rent with separate entrance. Available immediately.

தொடர்புகளுக்கு: **416.836.0010**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

*We are working with a group of students who are looking to rent rooms , house or basement apartments in Scarborough and surrounding area.*

உங்களது *rooms , house or basement* இனை சட்டரீதியாக *University / College Students* இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட

**Logee - 416.272.6811 / Hari - 647.262.8490**

*HomeLife Future Realty Inc. Brokerage*

## HELP WANTED

**COOK & KITCHEN HELPER**

***Danforth & Pape, King & Bathrust, Dundas & Keele*** ஆகிய இடங்களில் உள்ள ***Thai Restaurant*** இற்கு உடனடியாக வேலைக்கு ஆட்கள் தேவை. தொடர்புகளுக்கு: **647.968.9263**

## AZ DRIVER WANTED

Hiring AZ Drivers for short haul. Keep you busy year Round 60-70 hrs/week. Paying top $$ Hourly & per miles plus HST. Come home every day. Paying weekly direct deposit. Requirement Must have proof of experience minimum of 3 years as a AZ Diver Clean driving record. Able to cross border Canada/USA. Need to have Canadian passport/ Fast card or US Visa. If you have interest in this position and meet the stated requirement.

**Please submit your resume and drivers abstract or Call Raj @ 905-297-8985 Ext. 101**

**Email: Info@casritransport.com/Fax: 905-297-8985**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## AZ DRIVERS WANTED

**Seeking for experienced AZ drivers for CANADA & USA.**

*Requirements:*

- *Minimum 3-4 years of experience.*
- *Cross Border experience*
- *Good Communication Skills*
- *Clean Abstract*

*Please Contact* - **416-835-6701**

## மணமகன் தேவை

31 வயது கணவனை இழந்து 8 வயது மகனுடன் இலங்கையில் வாழும் இளம் பெண்ணுக்கு வெளிநாட்டில் வாழும் துணை ஒருவரைத் தேடுகிறோம்.

***077.605.4756 Viber***

***076.326.2163 Viber***

## மணமகள் தேவை

சைவ வேளாளர் குலத்தில் பிறந்த 31 வயது பட்டதாரி மணமகனுக்கு அதே குலத்தில் பிறந்த பட்டதாரியும் நல்ல தொழில் செய்யும் மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: ***416.903.0821***

## பராமரிப்பாளர் தேவை

**HWY 7 & 9 LINE** இல் வயதான பெண்மணியைப் பராமரிக்கப் பராமரிப்பாளர் தேவை. சமையல் வேலை தெரிந்தவர் விரும்பத்தக்கது.

***647.325.9186 / 647.667.0482***

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820 / 647.868.2440**

## CONVENIENCE STORE FOR SALE

Scarboroughவில் **Brimley & St. Clair** -Brimley beachஇற்கு அருகாமையில் 17 வருடகாலமாக நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் Convenience Store Business விற்பனைக்கு உள்ளது. வாடகை $2,500. மேலதிக விபரங்களுக்கு - **647.703.3254**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

**Contact :** பிறேம்-**647.835.5244**

## USED CARS WANTED

USED TOYOTA CARS, VANS WANTED. ANY CONDITION.

**Call:**

**437.688.6305**

## JOB JOB JOB

***Sai Trading Fancy Jewellery Store***

***5800 Sheppard Ave. East unit-8***

***Part time/ full time.***

***Job available (women only)***

தொடர்புகளுக்கு:***: Uma Sritharan at 416-580-3945***

## JOB JOB JOB

***Cashiers Wanted immediately in Scarborough Location.***

தொடர்புகளுக்கு:***647.204.1520***

## HELP WANTED

***Ottawa*** இல் உள்ள தமிழ் ***Restaurant*** இற்கு அனுபவமுள்ள சமையல் ஆட்கள் தேவை. தங்குமிட ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: ***(416) 419.7548***

## HELP WANTED

***Sauter's Inn Restaurant***

***AJAX*** இல் அமைந்துள்ள ***Resturant ( Pickering Village)*** ஒன்றிற்கு உடனடியாக வேலைக்கு ஆள் தேவை. ***EVENING SHIFT 4PM -9PM***

***FULL TIME BREAKFAST COOK, KITCHEN HELPER, DISH WASHER.***

***Please call - Kumar: 905.427.6760***

***(Please Call 2:00pm to 5:00pm) 109,Old kingston Road, Ajax.***

## RENOVATION

- *Plumbing*
- *Painting*
- *Electric*
- *Tiles*
- *Basement*
- *Hardwood*
- *Laminating*
- *Kitchen*
- *Landscaping*
- *Interlock*

ஆகிய வேலைகள் செய்துகொடுக்கப்படும். அழையுங்கள்

***Dinesh: 647.625.2239 / drsharvin15@gmail.com***

## COOK WANTED in Ajax & Oshawa

***We are Looking for experienced cook at. popular Canadian restaurants in Ajax & Oshawa.***

***Full time & part time available.***

சம்பளம் மற்றும் சலுகைகள் பேசி தீர்மானிக்கப்படும்.

***Please Call - Mano: 647.283.8222***

## HELP WANTED

***Welesley & Parliament*** இற்கு அருகாமையிலுள்ள ***Convenience Store*** இற்கு வேலைக்கு ஆள் தேவை. ஒய்வு ஊதியம் பெறுபவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

***Please Contact : 416.473.8520***

## LINE COOK WANTED

***QUEEN & LESLIE***இல் அமைந்துள்ள ***English Pub***க்கு ***Chef and line Cook Wanted immediately.***

***FULL TIME / PART TIME Onsite parking available.***

***Call : 416.220.9179 / Email: chadsenagroup@gmail.com***

## வேலைக்கு ஆட்கள் தேவை

**VICTORIAPARK & HWY 401 (Scarborough)**இல் அமைந்துள்ள **ENGLISH PUB**க்கு Experienced **LINE COOK , COOK HELP & WAITRESS** wanted immediately. FULL TIME / PART TIME

**Please contact at 416-566-9994**

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC.**

**(SCARBOROUGH)**

உங்கள் பயணத் தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

## DEVOTED AUTO CARE

For all your automotive needs, Auto repair, interior & exterior wash & polishing , ceramic coating, wheels & tires, tints & windshields & much more. Licensed technician performing all repairs & work.

உங்களின் அனைத்து வாகனத் தேவைகளுக்கும், வாகனப் பழுதுபார்ப்பு, உட்புறம் மற்றும் வெளிப்புறம் கழுவுதல் & மெருகூட்டல், சக்கரங்கள் & ரயர்கள், கண்ணாடிகள் மற்றும் பல. உரிமம் பெற்ற தொழில்நுட்ப வல்லுநர் அனைத்து பழுது மற்றும் வேலைகளைச் செய்கிறார்.

தொடர்புகளுக்கு: 647-242-7212 Stouffville at 64 Sandiford drive # 16 L4A 7X5



## COOK WANTED

**WIMPY'S DINER**

*Need full time experienced cook for all day breakfast restaurant Wimpy's Diner at OSHAWA.*

*Good pay or Negotiable.* சம்பளம் பேசித்தீர்க்கப்படும்

*Please send resume to Email: noorfaiz12345@yahoo.com*

*Or Call:* **416.882.0044**


# இரத்தம் இரணம் இரௌத்திரம் (RRR) – திரை விமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

1920இல் ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலத்தில் கொமாரம் பீம் மற்றும் அல்லூரி சீதாராமராஜு என்ற இரு இந்திய விடுதலைப் போராளிகள் வாழ்ந்தனர்.

கொமாரம் பீம் தெலுங்கானாவின் கோண்ட் பழங்குடி மக்களைச் சேர்ந்தவர். அப் போது அவர்களை ஆண்ட ஆங்கில அரசிற்கு ஆதரவான ஹைதரபாத் நிசாமிற்கு எதிராக அவர் முதற் குடி மக்களுக்காகப் போராடினார்.

அல்லூரி சீதாராமராஜு ஆந்திராவில் மக்களைப் பிரித்தானிய அரசிற்கு எதிராகப் போராட வைத்து அதற்குத் தலைமை தாங்கினார். இவ்விருவரும் ஒரே காலத்தவர்கள் என்றாலும் ஒருநாளும் சந்திக்கவில்லை. அவர்கள் சந்தித்து இருந்தால் எப்படி இருந்திருக்கும்? என்ற கேள்விக்குப் பதிலாக இயக்குநர் S S இராஜமௌலியின் இந்த RRR திரைப்படம் அமைகிறது.

கோண்ட் மக்களைச் சேர்ந்த மல்லி என்ற சிறுமி அப்பகுதியின் Governor ஒருவரால்



வேலை செய்தவற்காகக் கடத்தப்படுகிறார். அவரைத் தேடி கொமாரம் பீம் (Jr. NTR) டெல்லி நகருக்கு அக்தர் என்ற மாறு வேடத்தில் சில நண்பர்களுடன் செல் கிறார். டெல்லியில் அல்லூரி சீதாராமராஜு (இராம் சரண்) ஒரு காவலதிகாரியாகப் பணிபுரிகிறார். அவர் டெல்லிக்கு வந்த பீமின் கோண்ட் குழுவைப் பிடிக்கும் பணியில் அமர்த்தப்படுகிறார்.

ஒரு பக்கத்தில் பீமின் கோண்ட் நண்பர்களை சீதாராமராஜு தேட மறுபக்கத்தில் அக்தரும் சீதாராமராஜுவும் சந்தித்து நண்பர்கள் ஆகின்றனர். சீதாராமராஜு ஒரு காவலதிகாரி என்று பீம் கண்டு பிடிப்பாரா? இல்லாவிட்டால் தான் தேடும் கோண்ட் போராளி அக்தர் தான் என்று சீதாராமராஜுஇற்குத் தெரிய வருமா? அவ்வாறு தெரிய வந்தால் என்ன நடக்கும்? மல்லியின் நிலை என்ன? என்ற கேள்விகளுக்குப் பதில்களைப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.



மிகுந்த செலவுடன் எடுக்கப்பட்ட இப்படம் தற்போது அதிகூடிய வருமானம் பெற்ற இந்தியப் படங்களில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கு ஏற்ப படத்தின் அமைப்பும், காட்சிகளும் மிகவும் நன்றாக அமைந்துள்ளன. கதாநாயகர்களின் நடிப்பும் ஆடல் திறனும் இப்படத்தில் நன்றாகக் காட்டப்படுகின்றன.

பெண் கதாபாத்திரங்களாக இந்தி நடிகை அலியா பட் மற்றும் சிரியா சரண் நடித்தாலும் அவர்கள் ஓரிரு காட்சிகளில் மட்டுமே வருகின்றனர். இவர்களைவிட Jenny என்ற ஆங்கிலேயப் பெண் கதாபாத்திரம் அதிக காட்சிகளில் வருகிறார். இப்படத்தில் காதல் காட்சிகளுக்கு இடமளிக்கப்படவில்லை.

சீதாராமராஜும் பீமும் உண்மையான விடுதலைப் போராளிகளின் அடிப்படையில் எடுக்கப்பட்டாலும், பெயர்களும் சில குணங்களையும் விட இப்பாத்திரங்களும் கதையும் முழுவதும் கற்பனை. எனவே ஏன் இந்த வரலாற்று நாயகர்களின் பெயர்களை வைத்து இக்கற்பனைக் கதை எடுக்கப்பட்டது என்ற கேள்வியும் எழுகின்றது.

உதாரணத்திற்கு சீதாராமராஜு ஒரு காவல் அதிகாரி அல்ல. காவலர்களுக்கு எதிராகப் போராடியவர். இருந்தாலும் படத்தில் கதாபாத்திரங்கள் நன்றாகவே அமைக்கப்பட்டுள்ளன. பலவேறு விடயங்களில் பீமிற்கு மாறுபட்டவராக இருந்தாலும் சில ஒற்றுமைகளின் காரண மாக இவர்கள் இருவருக்கும் இடையில் வரும் நட்பு நன்றாகக் காட்டப்பட்டது. சிறு காட்சிகள், உவமைகள் மூலமாகக் கதை நன்றாகச் செல்கிறது. கடைசியில் சில காட்சிகளில் புராணக் கதைகளைப் போல (Mythologize) கதாபாத்திரங்களை வேறுபடுத்திக் காட்டியிருக்கத் தேவை யில்லை. நன்றாகத் தயாரிக்கப்பட்ட, மற்றும் பிரித்தானிய அரசின் கொடுமைகளைக் கண்டிக்கும் இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.


## LAUNDRY BUSINESS FOR SALE

*Business only sale. 900 Sqft. Surrounded by apartment Buildings, Over 20 years business. New Maytag washer 12 nos, Dryers 16 nos, Tank less water heater, Gross rent $2,260, OSHAWA - TAUNTON / SIMCOE*

*Please Call: Raja - 416.315.9397*

**HOMELIFE/GTA REALTY INC.** Brokerage*

**5215 Finch Ave.. E. #203, Toronto, ON M1S 0C2**

• Independently Owned and Opeated



## தமிழ்ப்பூங்காவின் பாடுங்குயில்-2022

தமிழ்பூங்காவின் பாடுங்குயில் 2022இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயது 4 முதல் 12வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: May (வைகாசி) 31, 2022.

விபரங்களுக்கு: **647.706. 6123**

***3001 Markham Road #21, Scarborough, ON M1X 1L6***



## யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்

சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

**Markham – Middlefield/Denison- Bsmt**
**(2Brm + 1Bath) [$1,450/m]**
**Markham – Markham/Elson- Bsmt**
**(1Brm + 1Bath) [$1,300/m]**
**Toronto – Mccowan/Lawrence – Detached**
**(2+1Brm + 2Bath) [$3,450/m]**
**Toronto – Ellesmere/Military Trail – Room**
**(1Brm + 1Bath) [$1,000/m]**
**Toronto – Ellesmere/Conlins – Bsmt**
**(2Brm + 1Bath) [$1,500/m]**
**Toronto – Meadowvale/Sheppard – Bsmt**
**(2Brm + 1Bath) [$1,650/m]**
**Toronto – Scarbo Golf Club/Lawrence – Detached**
**(3Brm + 1Bath) [$2,750/m]**

**Available for Rent**

**Toronto – Donmills/Sheppard – Condo Apt**
**(1+1Brm + 1Bath) [$2,300/m]**
**Hamilton – Britannia/Ritson - Bsmt**
**(1Brm +1Bath) [$1,600/m]**
**Brock Beaverton– Simcoe St/Mara Rd - Detached**
**(4Brm +3 Bath) [$2,800/m]**
**Carlington– Hwy401/Hwy2 - Bsmt**
**(2Brm +1Bath) [$1,950/m]**
**Carlington– Middle Rd/William Fair Rd - Bsmt**
**(2Brm +1Bath) [$2,000/m]**
**Pickering– Rosebank;Strouds Lane - Bsmt**
**(2Brm +1Bath) [$2,000/m]**
**Pickering– Whites Rd/Kingston Rd – Condo Townhouse**
**(2Brm +3Bath) [$2,675/m]**

**BUY / SELL/ LEASE / INVEST**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களை எப்படி தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வாழ்ந்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் எனது 32 வருட அனுபவம் உங்களுக்குக் கைகொடுக்கும்.


**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

## பகவத்கீதையை...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ளது குறிப்பிடத்தக்கது. ஒரு மாணவனுக்கு சமஸ்கிருதம் தெரிந்தால் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற முடியும் என நியூசிலாந்தில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டு சமஸ்கிருதத்தை பள்ளி பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அணுகுண்டின் தந்தை




ஜே.ராபர்ட் கீதையின் தீவிர ரசிகராகக் காணப்படுவதோடு தனது வாழ்க்கைத் தத்துவத்தை வடிவமைத்த புத்தகங்களில் ஒன்று என்று கீதையினை வர்ணித்துள்ளார். டிசம்பர் 21ஆம் திகதியை கீதா ஜெயந்தி தினமாக உலகளாவியரீதியில் கொண்டாடப்படுவதும் இதற்கு தக்க சான்றாக அமைகின்றது. ஸ்ரெல்லா காம்கிரஸ் என்ற அறிஞர் பகவத்கீதை தன்னை மூச்சை நிற்கும் அளவு ஈர்த்தது என்று குறிப்பிட்டுள்ளார். 2007ஆம் ஆண்டு அமெரிக்க செனட் பிரதிநிதிகள் சபையின் அமர்வில் பகவத்கீதையின் விளக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. 2015ஆம் ஆண்டு அமெரிக்கா சென்ற இந்திய பிரதமர் ஜனாதிபதிக்கு அவருடைய வாசிப்புக்காக பகவத் கீதை அன்பளிப்புச் செய்தார். அதேநேரம் பிரித்தானியா முன்னாள் பிரதமர் டேவிட் கேமரூன் பகவத் கீதை ஒரு புனித நூல் என குறிப்பிட்டுள்ளார். பல்வேறு மேலை நாடுகளில் பகவத் கீதையின் மேல் சத்திய பிரமாணம் செய்யும் அளவிற்கு பகவத் கீதை சிறப்பு பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. இந்த வகையில் ஐரோப்பியரின் வருகையின் பின் மேலைத்தேய அறிஞர் களால் பகவத் கீதையின் மொழிபெயர்ப் பின் ஊடாக இந்து சமயமானது எல்லைகள் தாண்டி விரிவுபடுத்தப்பட்டு இன்றுவரை அது தொடர்ச்சியாக நிலைத் திருப்பது நமது மதத்தின் மேன்மையையும் மேலை நாட்டினரின் அளப்பெரிய பங்கினையும் எடுத்தியம்பும் வகையில் திகழ்கின்றது. இந்து சமய வரலாற்றில் இத்தகைய மேலைநாட்டினரின் பங்களிப்பானது எம்மால் எக்காலத்திலும் சிரம் தாழ்த்தி போற்றப்பட வேண்டியது என்றால் அது மிகை ஆகாது.

**For Rent in Ajax**



**2 Bedroom (Basement)**

- Walk out
- 1 Full Washroom
- Separate Laundry
- 1 Parking available

ROSSLAND / RAVENSCROFT

உங்கள் ஆதனங்களை விற்க /வாங்க /வாடகைக்குக் கொடுக்க எங்களை நாடுங்கள்.

**Please call: George Paranthaman - 416.277.9044**
**HOMELIFE/GTA REALTY INC. Brokerage***
**5215 Finch Ave.. E. #203, Toronto, ON M1S 0C2**
• Independently Owned and Opeated

# A New Project by

TRIDEL
BUILT FOR LIFE

## @ 60 Queen St. East, Toronto
## (Queen + Church)



- 57 Storeys
- 445 Units
- 2 Blocks East of Yange Street
- Height 60Ft. (185.9m)

Developers : TRIDEL & BAZIS
Architect : Core Architect

For More information Feel Free to Call .....

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
**Tel: 416-321-6969** * Independently owned and operated.

## NOW



## FUTURE



# ENDLESS
## Development Possibilities

## 401 DUNLOP STREET EAST - WHITBY
### Live. Shop. Dine. Stroll.

- Minutes to the water's edge
- R4 Zoned for multiple uses - Multi-Residential including retirement living
- Located in the heart of Downtown Whitby

**CONTACT ME FOR FULL DETAILS!**

RE/MAX

RE/MAX REALTRON
REALTY INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED & OPERATED

**Dee Sarwan**
Sales Representative
(416) 917.8893
deesarwan.com
dee@deesarwan.com



SCAN FOR DETAILS

வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
vanyjeganmohan@gmail.com
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East, Unit 222 Toronto ON M1S 0C2

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com

INDRA MICHAEL XAVIER
Broker
647.995.6829
indra.m.xavier@gmail.com
Buying Home/ Selling / Investing
HomeLife/Future Realty Inc.,
905.201.9977 905.201.9229

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact : 647-290-1022 | 0605bala@gmail.com | visit : www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* We help to find your best future home!

# எம்.ஜி. ஆரை...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

யார் வேண்டுமென்றாலும் அரசியலுக்கு வரலாம். அப்படியே சினிமாவிலிருந்து வந்தாலும் முழுமையாக விட்டுவிட்டு வரவேண்டும்.

'அரசியல் ஒரு சாக்கடை' என்று இளம் தலைமுறையினர் அரசியலை ஒதுக்குகிறார்களே?

அப்படி யார் சொல்வது? இளைஞர்கள் அப்படி சொல்லி இதுவரை நான் கேள்விப் பட்டதே இல்லை. ஆனால், அப்படி ஒதுங்கிப்போனால் தவறு. எல்லாமே நமக்கு அரசியலில் இருந்து தான் கிடைக்கிறது. இளைஞர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கிப்போகக் கூடாது. எல்லாத் துறையிலுமே பாஸிட்டிவ், நெகட்டிவ் உள்ளன. அதற்காக ஒதுக்கி விடுகிறோமா என்ன? அரசியலையும் அப்படித்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

உங்களுக்குப் பிடித்த அரசியல் தலைவர்?

எம்.ஜி.ஆர்.தான். என்றைக்குமே எனக்கு ஒரு புரட்சித் தலைவர்தான். ஒரு புரட்சித் தலைவிதான். இவர்களைப் பிடிக்க ஒன்றிரண்டு காரணங்கள் இல்லை. நிறையவே இருக்கிறது. எம்.ஜி.ஆர். எங்கள் வீட்டிற்கே பலமுறை வந்துள்ளார். டிபன் சாப்பிட்டுள்ளார். எம்.ஜி.ஆரின் பயோகிராஃபி இயக்க வாய்ப்பு வந்தால் கண்டிப்பாக இயக்குவேன். அப்படியொரு வாய்ப்பு வரும்போது ரொம்ப சந்தோஷ மாக இயக்குவேன். தினமும் எம்.ஜி.ஆரை நினைக்காமல் நான் தூங்கமாட்டேன்.

எம்.ஜி.ஆரின் பழைய படங்களை மறு உருவாக்கம் செய்யும் திட்டம் இருக்கிறதா? அவருடைய எந்த படங்களில் இருந்தாவது பாதிக்கப்பட்டு அதன் காட்சிகளோ கதையோ உங்கள் படத்தில் வைத்துள்ளீர்களா?

எம்.ஜி.ஆரின் நிறைய படங்களை இப்போதும் ரீமேக் செய்யலாம். ஆனால், அதில் நடிப்பது யார்? அவரைப் போல யார் நடிக்க முடியும்? அவர் ஒரு மேஜிக். மேஜிக்கை எப்போதும் தொடக்கூடாது. அதை அப்படியே ஓரமாக வைத்து பத்திரப்படுத்தி கொள்ளவேண்டும்.

உங்கள் முதல் மனைவி நடிகை சோனியா அகர்வால் குறித்து?



நோ கமெண்ட்ஸ்.

'ஆயிரத்தில் ஒருவன்' இரண்டாம் பாகம் படத்துக்கான திரைக்கதை தயாராக இருப்பதாகக் கூறியிருந்தீர்களே. அந்தப் படம் எப்போது வரும்?

கூறியிருந்தது உண்மைதான். இரண்டாம் பாகம் திரைக்கதை தயாராக உள்ளது. சோழர்களுக்கென்று தனி சிறப்பம்சம் உண்டு. அதனை இன்னும் சிறப்பாக செய்யவேண்டும். என்னுடைய படங்களிலேயே மிகவும் கடுமையான படைப்பு கடுமையான உழைப்பு ஆயிரத்தில் ஒருவன்தான். நிறைய பேர் படம் எடுக்க ஏன் ஆறு மாதம், ஒரு வருடம் ஆகிறது என்று கேட்கின்றர். ஆனால், அதிலுள்ள உழைப்பு, நேரம், காலம், உடல்நிலை, வெப்பநிலை என்று நடிகர்களின் நேரம் என்று நிறைய உள்ளது. அதேநேரம் 'ஆயிரத்தில் ஒருவன்' இரண்டாம் பாகம் எடுக்க கார்த்தி உள்ளிட்ட நடிகர்கள் வந்தாக வேண்டுமே. காலப்போக்கில் எல்லாமே நடக்கும் என்று நினைக்கிறேன். எதையும் நாம் வலிந்து செய்துவிட முடியாது.

சோழர்களை நாகரிகமற்ற முறையில் காட்டிவிட்டதாக சர்ச்சையானதே?

மக்கள் தவறாகப் புரிந்துகொண்டனர். நான் சோழர்களை தவறாகக் காட்ட வில்லை. ஆனால், அடுத்த பாகத்தில் பாஸிட்டிவாகக் காட்டுவேன்.

குறையே சொல்லமுடியாத திரைப்படம் என்றால் எதனை சொல்வீர்கள்?

திரைக்கதை, கேமரா, நடிப்பு என்று அனைத்திலும் மிரட்டிய 'காட் ஃபாதர்'.

செல்வா - யுவன் சங்கர்ராஜா எப்போதும் வெற்றிக் கூட்டணி. மீண்டும் யுவனுடன் இணைந்தது குறித்து?

பிரிவு இருந்தால்தானே இணைவதற்கு? எங்களுக்குள் பிரிவே இல்லை. 'என்.ஜி.கே.' இசை முடித்ததும் யுவன் நெற்றியில் முத்தமிட்டேன். யுவன் ஒரு அற்புதமான இசையமைப்பாளர்.

'இதுதான் நான்' என்று நீங்கள் உணர்ந்த தருணம்?



அது என் மகள் லீலாவதி பிறந்த தருணம். ஒரு பெண்ணைப் பெற்றெடுத்து அவளின் சிறு சிறு தருணங்களை மகிழ் வாக உணர்வதற்காகவே பிறந்துள்ளேன்.

இக்கட்டான சூழலிலிருந்து மீண்டு வரவேண்டும் என்றால் என்ன செய்வீர்கள்?

நான் அன்றைய நாளை மட்டும்தான் பார்ப்பேன். சாப்பிட்டு நன்கு தூங்கிவிடுவேன். தூக்கம் என்பது மிகவும் முக்கியம். மற்றொரு நாளின் சூரிய விடியல் மிகவும் பாஸிட்டிவ் எனர்ஜி

'காதல் என்றால் காமம்தான். காமம் அழகானது' என்று உங்கள் படங்களில் காட்டியிருப்பீர்கள். மீண்டும் எதிர்பார்க்கலாமா?

இங்குதான் இருக்கேன். இனி கண்டிப்பா எடுப்பேன். எனது படங்களை மக்கள் தவறாக புரிந்துகொள்ளவில்லை. இல்லையென்றால் படம் ஓடியிருக்காது.

எப்போதும் அமைதியாகவே இருக்கிறீர் கள். குறைவான வார்த்தைகளையே பேசுகிறீர்களே என்ன காரணம்?

சிறு வயதிலிருந்தே தனிமையை விரும்புபவன் நான். கிண்டல் செய்வது, அரட்டை அடிப்பது போன்ற எல்லாவற்றிலும் ஒதுங்கியே இருந்துவிட்டேன். அதனால், பழகிவிட்டது.

விஜய், அஜித்தோடு எப்போது படம் இயக்குவீர்கள்?

எல்லோருக்கும் விஜய், அஜித்துடன் படம் பண்ண ஆசை இருக்கும். எனக்கும் இருக்கிறது. அதற்கான சூழல் வரும்போது பண்ணுவோம்.

உங்கள் மனைவி கீதாஞ்சலி 'மாலை நேரத்து மயக்கம்' படத்தோடு நின்றுவிட்டாரே? அடுத்த படம் ஏன் இயக்கவில்லை?

நான் தினமும் அவங்களை ஊக்குவித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அவங்க பண்ணனும் இல்லையா? குழந்தைகள் இருப்பதால் தற்போது பிஸியா இருக்காங்க. அவங்க இயக்குநருக்குப் படித்தவர். படம் பண்ணனும் என்று எனக்கும் ஆசை. கூடிய விரைவில் பண்ணுவார்.